
# ஆசிய ஜோதி

தேசிகவிநாயகம் பிள்ளை



T17869
R005L01
T.17869

# ஆசிய ஜோதி

# ஆசிய ஜோதி

கவிமணி

சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்

இயற்றியது

பாரி நிலையம்

184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1941
பதின்ஞன்காம் பதிப்பு : ஜூன், 1977
பதினைந்தாம் பதிப்பு : 1979
பதினாறும் பதிப்பு : செப்டம்பர், 1980
பதினேழாம் பதிப்பு : ஜூன், 1983
பதினெட்டாம் பதிப்பு : செப்டம்பர், 1985

விலை ரூ. 6-00

நூல் உரிமை :
V. வீரலட்சுமி அம்மாள்
அவர்களுக்கு உரியது

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புத்தர் அவதாரம் | ... | 9 |
| 2. | அருள் உரிமை | ... | 21 |
| 3. | காதல் பிறந்த கதை | ... | 27 |
| 4. | சித்தார்த்தன் கேட்ட தேவகீதம் | ... | 33 |
| 5. | சித்தார்த்தன் துறவு | ... | 37 |
| 6. | புத்தரும் ஏழைச் சிறுவனும் | ... | 46 |
| 7. | கருணைக் கடல் | ... | 50 |
| 8. | புத்தரும் சுஜாதையும் | ... | 65 |
| 9. | புத்தரும் மகனிழந்த தாயும் | ... | 77 |

# பதிப்புரை

"ஆசிய ஜோதி" என்னும் இக் காவிய நூல், உலகிற்கு வழிகாட்டியாகத் தோன்றிய புத்தர் பெருமானுடைய சரித்திரத்தை வெளியிடுகிறது. புத்தர் பெருமான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது பாரத நாட்டில் தோன்றினார்.

"பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே"

என்று பாடினார் பாரதியார்.

புத்தருடைய தியாகமும், அவர் போதித்த அறிவுரைகளும் வெளிநாட்டறிஞர்கள்பலரின் மனத்தைக் கவர்ந்தன. யுவாங்சுவாங் முதலிய சீன அறிஞர்கள் புத்தர் பிறந்த புண்ணிய பூமியைத் தரிசிக்க விரும்பி இங்கு வந்தார்கள்; புத்தருடைய போதனைகளைக் கற்றுத் திரும்பினார்கள். பாரத நாட்டிலிருந்து புத்தமதப் பிரசாரகர்களும் வெளி நாடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தார்கள். இவற்றின் பயனாய், புத்தருடைய பெருமை சீனா, ஜப்பான், பர்மா, சயாம், இலங்கை முதலிய வெளிநாடுகள் வரை சென்று பரவியுள்ளது. இன்றைய உலகிலே பௌத்த சமயத்தைப் பின்பற்றும் மக்கள் அறுபது கோடிக்குமேல் உள்ளார்கள்.

நமது பழந்தமிழ் நூல்களில் புத்தரைப் பற்றியும் பௌத்த சமயத்தைப் பற்றியும் பல குறிப்புக்கள் காணப் படுகின்றன. எனினும், அவற்றைக் கொண்டு நாம் புத்தர் பெருமானுடைய சரிதத்தை முற்றும் அறிந்து கொள்ள

இயலாது; இக்குறையைக் கவிமணியவர்களின் "ஆசிய ஜோதி" இப்பொழுது போக்கிவிட்டது.

ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் ஆசிய ஜோதி (Light of Asia) என்னும் பெயரில் கவிதை நூல் ஒன்று வெளியிட்டிருக்கிறார். அந்த நூலைத் தழுவித் தமிழ் மணம் கமழக் கவிமணியவர்கள் பழகு தமிழில் பாடியளித்திருக்கிறார்கள்.

அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களுடைய கவிதைகளில் ஈடுபட்ட பொழுது, அவர்களது மனத்தை முற்றும் கவர்ந்தது ஆசிய ஜோதி.

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப்பெருமை
ஆசிய ஜோதியெனும் புத்தர் போதம்
அழகு தமிழில் சொன்னான் அதுபோதும்"

என்பது கவிஞரது வாக்கு. ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், கவிமணி அவர்களை அறிவதற்குத் தம்மை முதன்முதல் தூண்டியது 'கருணைக் கடல்' என்ற ஆசிய ஜோதிப் பாடல் என்று, தமது 'இதய ஒலி'யில் வெளியிடுகிறார். இங்ஙனமாகப் பலரும் கவிமணியவர்களின் கவிதையாற்றலை உணருமாறு, அவர்கள்தம் பெருமையைத் தமிழுலகில் பரப்பியவை, 'கருணைக் கடல்' முதலிய ஆசிய ஜோதிப் பாடல்கள்.

ஆசிய ஜோதிப் பாடல்களைக் குறித்துப் பேராசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள், தமது 'தமிழின் மறுமலர்ச்சி' என்ற நூலில், பின்வருமாறு வெளியிட்டுள்ளார்கள்.

"புத்தர்பிரானது சரித்திரப் பகுதிகளிற் சிலவற்றை அதியற்புதமான தமிழில் பாடியுள்ளார். இப்பகுதிகளை

நாம் படித்து நோக்கினால், கவிமணி எவ்வளவு அழகாக இச் சரிதத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியும். ஆசிரியரது ஆழ்ந்த உணர்ச்சியும், தமிழின் குழைவும், கவிதையின் அருமைப்பாடும் படிப்போரது உள்ளத்தைக் கனிவிப்பன...

"பல உயர்ந்த செய்யுட்கள் ஆங்கிலத்திலிருக்க, இப் பாடற் பகுதிகளை மொழிபெயர்க்கத் தெரிந்து எடுத்துக் கொள்வானேன்? புத்த பகவானது அருட்பாங்கிலே கவிமணி ஈடுபட்டதே காரணம். தாமும் அவ் அருட்கொள் கையை மேற்கொண்டவர் என்பதும் காரணம். அன்றியும், இப்பாடல்கள் பெயரளவில்தான் மொழிபெயர்ப்பு. இவற்றை ஒரு நூதன சிருஷ்டி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

"உண்மையான தமிழ் மரபுணர்ச்சி வேண்டுமாயின், 'கருணைக் கடல்' முதலிய பாடற் பகுதிகளைக் கற்க வேண் டும். வருங்காலத்துக்குரிய தமிழ் வேண்டுமாயின், இவற் றையே கற்க வேண்டும். மிகப் பூர்வ காலத்துள்ள இயற் கைத் தமிழின் இனிமை காண வேண்டுமாயின், இப்பகுதி களையே மீண்டும் மீண்டும் கற்க வேண்டும். அமர்ந்த, இனிய, மனோரம்மியமான தமிழ் மணம் வேண்டுமாயின், கவிமணியினது இப்பாடற் பகுதிகளிலே இனிது நுகர லாம்."

இப் பதிப்பை வெளியிடுவதில் உதவி புரிந்த திரு. வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு எமது நிலையத்தின் நன்றி உரித்தாகுக.

சென்னை,
2-10-'64.

பாரிநிலையத்தார்

# 1. புத்தர் அவதாரம்

## இறைவன் தேவர் சபையில் தெரிவித்தல்

"வையகத்தில் உயிர்கள்மிக வாடக் கண்டேன்;
வழியறியாது அவைமயங்கி வருந்தக் கண்டேன்;
மெய்யிதுஎன்று உய்யுநெறி காட்டி நன்மை
விளைவிப்பார் எவரையுமே கண்ணிற் காணேன். 1

எண்ணரிய சென்மங்கள் எடுத்து முன்னம்
எவ்வுடம்பின் எவ்வுயிருக்கும் இடர்களைந்தேன்;
மண்ணுலகம் ஈடேற இன்னும் ஓர்கால்
மனிதஉடல் தாங்கமனத்து ஆசை கொண்டேன். 2

இப்பிறப்பை யல்லாது பிறப்பு வேறிங்கு
எனக்குமில்லை; என்னைவழி பட்டு வாழும்
ஒப்பரிய அடியவர்கள் எவர்க்கும் இல்லை;
உண்மைஈது எந்நாளும் உண்மை யாமால். 3

வானெழுந்து வளர்இமய மலையின் தென்பால்
வாழும்உயர் சாக்கியர்தம் மன்ன னுக்கு
யானுமொரு மகனாகச் செல்வேன்" என்றான்.
இமையவரை நோக்கிஅருள் இறைவன் மாதோ! 4

## மாயாதேவி கனாக் காணுதல்

### வேறு

அந்நாளில் அவ்விரவில் சுத்தோத னப்பேர்
அண்ணற்கு வாய்த்தமனை அலர்மங்கை யனையாள்
எந்நாளும் காணாத கனவொன்று கண்டாள்
எந்நாடும் எவ்வுயிரும் இன்புறவே அம்மா! 5

வேறு

ஆறு கதிரொளி செய்திடுமீன்—கண்ணுக்கு
அற்புதக் காட்சி அளித்திடுமீன்
ஏறும் அழகு பொலிந்திடுமீன்—திரை
எட்டும் ஒளிர ஒளிவிடுமீன். 6

சின்னஞ் சிறுமருப் பாறுளதாய்க்—காம
தேனுவின் பால்நிறம் பெற்றுள்ளதாய்,
மன்னும் மதவேழம் போன்றிடுமீன்—இந்த
வையம் ஒளிர ஒளிவிடுமீன். 7

விண்ணகம் விட்டு விரைந்திறங்கி—வரும்
வீதி யெலாம்ஒளி வீசிவந்து,
மண்ணகம் வாழ வலந்திரிந்து—தேவி
மாயை வயிற்றில் புகுந்ததுவே. 8

வேறு

வலமருங்கில் விண்மீனும் வயிற்றிற் பாய
மாதேவி துயிலுணர்ந்து மகிழ்ச்சி யுற்றாள்;
உலைவறியாத் திருவருளை வியந்து நின்றாள்;
ஒருதாயுங் கண்டறியா இன்பங் கண்டாள். 9

உலகில் நன்மை விளைதல்

வேறு

காலைக் கதிரோன் உதிக்குமுன்—ஆசிய
கண்ட மெலாம்ஒளி கண்டதுவே;
வேலைத் திரைகள் அடங்கினவே—திசை
வெற்புகள் நின்றுகூத் தாடினவே. 10

8. மாயை—மாயாதேவி; புத்தரது அன்னை

பட்டமரங்கள் தளிர்த்தனவே—எங்கும்
பாழ்ங்கிண றும்ஊறிப் பொங்கினவே;
திட்டுத் திடர்மணற் காடும்—சுடுகாடும்
சில்லென்று பூத்துச் சிலிர்த்தனவே. 11

சீரிய ஓடை குளங்களிலே—நல்ல
செந்தா மரைகள் மலர்ந்தனவே;
பாரிலே அவ்விராக் கண்ட—புதுமையைப்
பாடிட வல்லவர் யாரேயம்மா! 12

## வேறு

ஒண்சுடர் உலகில் உதித்தெழு காலை
மன்னிருட் சோலையோர் பொன்னிறம் பொலிய,
நிரந்தொளி பரந்து நிறைவது போல,
மாயையின் மனத்தெழு மகிழ்ச்சியும் பொங்கி
இடைவெளி யின்றி எவ்வெவ் வுலகும்

பாதல மீறுப் படர்ந்து சென்றது;
“பிறந்திட இறந்தீர்! இறந்திடப் பிறந்தீர்!
எழுமின்! எழுமின்! யாவரும் எழுமின்!
புத்த பெருமான் புவியில் உதித்தனன்;
அவனை வணங்குமின்; அவன்வழி பற்றுமின்;

அவனுரை கேண்மின்; அழிமனம் ஒழிமின்;
நலமுறு மெனவே நம்பி நாடுமின்;
உள்ளந் தெளிமின்; உறுதி கொண்மின்;
உய்யும் வழிஈது? உண்மையும் ஈதாம்;
என்னும் மொழிகள் எவ்வெவ் விடத்தும்

மந்திர மொழிகளாய் வந்தெழக் கேட்டனர்.
அதனால்,
அமைதி நிலவி, அன்பு தழைத்துக்
குவலய முழுதும் குதூகல முற்றது.

கடலும் மலையும், காடும் மேடும்,
பூவுல கறியாப் புதுமணம் கமழ,
இனிய தென்றல் எழுந்து வீசியது.

## பெரியோர் கனவின் பலனைக் கூறுதல்

மறுநாட் காலை மகிழ்ச்சி மிகவே
கற்ற பெரியோர் கனவின் பயனைக்
கொற்றவன் அறியக் கூறியது இதுவாம்; 13

### வேறு

"பாரரசி கண்டகனா நற்கனாவாம்;
பானுவுமே கற்கடக மனையில் நின்றான்;
சீரமையும் ஆண்மகனைப் பெறுவாள்; அந்தச்
செல்வமகன் தெய்விக மகனே யாவான்

ஒருமுயர் ஞானகுரு வாகி எங்கும்
உண்மையுப தேசங்கள் செய்வான்; வேண்டின்
வாரிதிசூழ் புவிமுழுதும் ஆள்வான்; அன்னோன்
மகிமையெலாம் எடுத்துரைப்பது எளிதோ? ஐயா!" 14

## புத்தர் அவதாரம்

### வேறு

ஒருநாள் பகலில் உச்சியம் பொழுதில்
அரண்மனை யருகில் அணிமலர் மலர்ந்து
நறுமணம் வீசுவோர் நந்த வனத்தில்
தழையும் பூவும் தலையில் தாங்கிக்
கோயிலில் நட்டஓர் கொடிமரம் போல (5)

வளருமோர் அசோக மரத்தின் நிழலில்
மாயா தேவி வந்து நின்றனள்.

நிற்கவே,

உரிய காலம் உறுவதை உணர்மரம்,
உணராப் பொருளெதும் உலகினில் இல்லை;
மலர்முடி வணங்கி வளைந்து கவிந்தொரு
தழைவீ டாகச் சமைந்து நின்றது.

பாரிடம்,

பன்மலர் மலர்ந்தொரு பஞ்சணை யாயது;

பக்கத் தெழுமொரு பாறையும் பிளந்து,
மதலையை ஆட்ட மஞ்சன நீரை
ஓடும் அருவியாய் ஒழுக விட்டது.
தேவி,

நோவு நொம்பலம் நோக்கா டின்றியோர்
மகவினைப் பெற்று மகிழ்ச்சி யுற்றனள்.

மகவின் அழகிய வடிவினில் அமைந்த
எண்ணான் கரிய இலக்கணம் கண்டு, இது
தெய்விக மகவெனச் செப்பினர் தெரிந்தோர்.

சோபன மறிந்து சுத்தோ தனனும்
தாயை மகவொடு தண்டிகை ஏற்றி
அரண்மனை உய்த்திட ஆணை யிட்டனன்.

## நாற்றிசைக் காவலர் உருமாறி வருதல்

தண்டிகை அந்நாள் தாங்கிட வந்தவர்,
மாநில மீது மனிதர் அனுதினம்
செய்யும் வினைகளைச் செப்பே டுகளில்
தீட்டி நான்கு திசைகளும் நின்று

காக்கும் காவலர் கனக மால்வரை
வாழிடம் விட்டு வந்த தேவரென்று
உண்மை யுணர்ந்தோர் உரைக்கின் றனரே. 15

வேறு

வெள்ளியில் அங்கி அணிந்துகொண்டு—கையில்
வெண்முகத் தொளிரும் பரிசை யேந்தி
ஒள்ளணி வீரர் தொடர்ந்துவர—அங்கே
உம்பர்கோன் போகியாய் வந்து நின்றான். 16

நீலக் குதிரையின்மீதிலேறி—ஒளிர்
நீல மணிவட்டம் கையிலேந்தி
காலகும் பாண்டர் தொழுதுவர—எமன்
கஞ்சிகை யாளாக வந்து நின்றான். 17

செக்கச் சிவந்த குதிரையேறி—உயர்
செம்மணிக் கேடகம் கையிலேந்தி,
பக்கத்தில் நாகர்கள் சூழவ ருணனும்
பள்ளிச் சிவிகையா ளாக வந்தான். 18

பொன்னிற மான குதிரையேறி—நல்ல
பொன்னிலே செய்த கிடுகுமேந்தி,
மன்னிய யக்ஷர்க ளோடுகு பேரனும்
வண்ணச் சிவிகையா ளாகவந்தான். 19

வேறு

ஆண்ட விருதுகள் யாவும் கரந்துலகு
ஐயுறு தங்குவந்தார்—அவர்
பூண்ட வடிவால் உடையால் அப்பல்லக்குப்
போகியர் தாமேயானார். 20

தேவர் இவரென யாவருங் கண்டு
தெளிந்திடா வாறுவந்து—திசைக்
காவலர் கூடிச் சிவிகையைத் தோளிலே
காவியெ டுத்தனரே. 21

---

17. காலகும்பாண்டர்—யம தூதர்

உம்பரும் அன்று மனிதராய் மாறி
உலாவிக் களித்துநின்றுர்—என்றும்
அம்புவி வாழ இறைவனும் வந்தங்கு
அவதரித் தானெனவே. 22

## பெரியோர் மன்னனுக்கு உணர்த்தல்

### வேறு

உண்மையிது சிறிதேனும் உணரா னுகி
ஒப்பரிய சுத்தோத னப்பேர் மன்னன்,
அண்மையில் நேர்ந்தது, அபசகு னமென்ன
அயர்ந்து மனம்வாடி யங்குஇருந்த காலை, 23

### வேறு

கற்ற பெரியோர் கனுநூல் அறிந்தவர்கள்
கொற்றமுடி மன்னவனைக் கோயிலிலே சென்றுபணிந்து
"உலகம் முழுதும் ஒருகுடைக்கீழ் ஆளுமன்னன்,
அலகில் புகழுடையான், ஆண்மைத் திருவுடையான்,
ஓரா யிரமாண்டுக்கு ஒருமுறை தோன்றுமவன்.

சீரார் பெருமான், உன் செல்வமக னுய்வந்தான்;
எண்ணற் கரியபேறு ஏழுபெரும் பேறுஇந்த
மண்ணில் அவனுக்கு வாய்த்திருப்ப துண்டுஐயா!
தெய்வீக மான திருவாழி ஒன்றுகும்;
எய்தற் கரிய இரத்தினம் ஒன்றுகும்;

ஆகாய வீதிசெலும் அசுவமும் ஒன்றுகும்;
வாகான வெள்ளை வாரணமும் ஒன்றுகும்;
மதியிற் சிறந்தவொரு மந்திரி தானுண்டு;
சதுரில் தளராவோர் தளகர்த்தன் தானுண்டு;
காலைத் திருவின் கவினிற் சிறந்தநங்கை

சேலொத்த கண்ணியொரு தேவியும் உண்டு" என்றுர். 24

## நகரை அலங்கரித்தல்

### வேறு

இவ்வரிய பேறெல்லாம் எய்தற் கான
இம்மகனைப் பெற்றுமகிழ் கொண்டு மன்னன்,
"திவ்வியமா நகரெங்கும் சிறப்புச் செய்து
திருவிழாக் கொண்டாட வேண்டும்" என்றான். 25

### வேறு

மாநகர் வீதி விளக்கிநின்றார்—குலை
வாழைகள் வாசலில் கட்டிநின்றார்;
வானுயர் தோரணம் நட்டுநின்றார்—எங்கும்
வாசமெழு பன்னீர் வீசிநின்றார். 26

கோல மிட்டார்கொடி தூக்கிவிட்டார்—உயர்
கோபுரம் எங்குமே தீபமிட்டார்;
சாலை கடை கோயில் வீதியெலாம்—மலர்த்
தாமங்களால் பந்தல் செய்துவைத்தார். 27

பக்தியாய்ப் பூரண கும்பம்வைத்தார்—முனைப்
பாலிகைப் பக்கம் பொலியவைத்தார்;
குத்து விளக்குகள் ஏற்றிவைத்தார்—முத்துக்
கோவைகள் எங்குமே தொங்கவிட்டார். 28

## வேடிக்கைகள்

தேகப் பயிற்சிகள் காட்டிடுவார்—சிலர்
செப்படி வித்தைகள் செய்திடுவார்;
வேக அரவைவிட் டாட்டிடுவார்—சிலர்
விண்ணில் வடங்காட்டித் தாவிடுவார். 29

வாளினை வீசி விளையாடுவார்—சிலர்
மாறியெழும் ஊஞ்சல் ஆடிடுவார்!
தாளிற் சதங்கை இசைதரவே—பல
தாசிக ளும்சதிர் ஆடிடுவார். 30

மானைப்போல் வேடமிட் டாடிடுவார்—சிலர்
வன்கரடி யாட்டம் ஆடிடுவார்;
கானப் புலியைப் பழக்கி—விளையாட்டுக்
காட்டிடு வார்நகர் வீதியெலாம். 31

மல்ல யுத்தம்சிலர் செய்திடுவார்—கோழி
வாத்துக்கள் சண்டைக்கு விட்டிடுவார்;
வெல்லுந் தகர்களைத் தாக்கவிட்டுச்—சுற்றி
வேடிக்கை பார்த்துக் களித்துநிற்பார். 32

ஒத்த குழலிசை ஊதிடுவார்—கசிந்து
உள்ளம் உருகவே பாடிடுவார்;
மத்தளம் கொட்டித் தலையசைப்பார்—வீணை
வாசித் தமுதம் வடித்திடுவார். 33

## வணிகர் குழந்தையைக் காண வருதல்

தேசம் புகழும் குலவணிகர்—மன்னன்
செல்வக் குமரனைக் கண்டிடவே,
ஆசை யெழத்தங்கத் தாலங்களில்—பல
அற்புதப் பண்டங்கள் ஏந்திவந்தார். 34

கம்பளி சால்வை கரும்படங்கள் வாசக்
கத்தூரி பச்சைக்கற் பூரங்களும்
அம்பொன் மணிமுத்து மாலைகளும்—வகைக்கு
ஆயிர மாயிரம் கொண்டுவந்தார். 35

பத்து மடிப்பிலே மூடினாலும்—முகம்
பார்வை மறைந்திடாப் பட்டுக்களும்,
சித்திரச் சேலைத் தினுசுகளும்—நல்ல
செம்பொற் சரிகையுந் தாங்கிவந்தார். 36

வந்தவர் யாரும் வாழ்த்திநின்றார்—திறை
வைத்தடி போற்றி வணங்கி நின்றார்;
சிந்தைக் கினிய திருமகனுக்கு—அவர்
சித்தார்த்தன் என்னவே நாமமிட்டார். 37

## அசித முனி வருதல்

### வேறு

மன்னன் திருமா மகனைக் காணப்
பற்பல நாட்டுளார் பற்பலர் வந்தனர்.
அவரோடு,
மண்நசை விட்டு மறச்செவி அடைத்தோன்,
ஐம்புலன் அடக்கி அறச்செவி திறந்தோன்.

அரச நீழலில் அனுதினந் தங்கி
அருந்தவம் புரிந்த அசிதமா முனிவன்
புத்த ஞாயிறு புவியில் உதித்ததென்று
இமையவர் எடுத்த இசையொலி யதனைத்
தியான வேளையில் தெளிவுறக் கேட்டு

மனத்தில் அடங்கா மகிழ்வொடு வந்தனன்;
வந்த முனிவனை மன்னவன் அடிபணிந்து,
ஆசனம் உதவி, அர்ச்சனை செய்து
மாயையை நோக்கி, மதலையை எடுத்து அவன்
திருவடி வைத்திடச் செப்பினன். அவளும்

கணவ னிட்ட கட்டளை போற்றி
மைந்தனை எடுத்து வருவது கண்டு,

## அசித முனி உரைத்தல்

மாமுனி எழுந்து வணங்கி நின்று,
"பொறுபொறு, தாயே! பொறு" எனத் தடுத்து,
"மதலாய்! நின்னடி மலரிணைத் தொழுதேன்.

அவனே நீயாம் ஐயம் அதற்கில்லை!
பகவன் நீயே! பரமன் நீயே!
புனிதன் நீயே! புராணன் நீயே!
தருமன் நீயே! தலைவன் நீயே!

ஆயிர வாரத் தாழியான் நீயே!
உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி
நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே!
யானும் இன்றுஉன் இணையடி பணிந்து,
பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.

மன்னர் மன்னவ! மானிடத் தருவில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்
ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்.
மலரிதன் மணமே அறிவின் மணமாய்
மனத்தின் மாசு மாற்றிடும், ஐயா!

மலரிதன் மதுவே அருளின் மதுவாய்
மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும், ஐயா!
இம்மா மகனை ஈன்றவர் போல
மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ?
ஆயினும், அரசே! அரிவாள் போல்உன்

நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர் ஒன்றுஇம்
மகவால் உனக்கு வருவது திண்ணம்,
மங்கையர்க் கரசி, மாயா தேவி!
வாழ்க்கையோ துன்ப மயமாம்; அதனால்

ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி

மாண்டு மண்ணில் மறைவது போல,
இற்றைக்கு ஏழாம் நாளில் இறவா
இன்ப வீடு எய்துவது
உண்மையாம்'' என்று உரைத்து ஏகினனே. 38

## 2. அருள் உரிமை

### தேவதத்தன் அன்னப்புள்ளை எய்தல்

உலகம் முழுதும் ஒருகுடை யின்கீழ்
ஆளும் அண்ணல் அரண்மனை யருகில்
மலர்ந்த மலர்கள் மணமிக வீசப்
பொறிவண்டு ஆடும் பூம்பொழில் மீது,
வடதிசை இமய மாமலை அமர்ந்த
வாழிடம் நோக்கி, வளரும் அன்பால்
உருகிய உள்ளம் ஒழுகிய தென்னப்
பாடியே அன்னப் பறவைகள் வான
வீதி வழியே விரைந்து சென்றன.
செல்வது கண்டு, தேவ தத்தன்—
அரசிளங் குமரற்கு அண்டிய உறவினன்—
வில்லினை வளைத்து வெய்யதோர் பாணம்
எய்து நின்றனன்! எய்தஅப் பாணம்
முதன்முதலாக முன்னர்ச் சென்ற
அன்னப் பறவையின் அதன்சிறை யதனில்
படவே; ரத்தம் பாயப் பறவையும்
தளர்ந்து சுருண்டு தரையில் விழுந்தது.

### சித்தார்த்தன் அதை எடுத்தல்

விழுந்த அப்பறவை, மேனி முழுதும்
ஒழுகி ஓடும் உதிரம் புரளத்
துள்ளித் துள்ளித் துடிப்பது கண்டு,
சிந்தை கனிந்து, திருமா மன்னரின்,
செல்வக் குமாரன் சித்தார்த் தன்போய்,
மலர்ந்து விரியா வாழைக் குருத்தினும்
தண்ணிய கரங்களால் தாங்கி எடுத்து,

மடியில் வைத்து மார்போடு அணைத்துத்
தழுவித் தழுவித் தளர்ச்சி நீக்கினன்.
அப்பால்,
இடக்கையிற் பறவையை ஏந்தி, அம்பினை
வலக்கை யதனால் வாங்கி, வடிந்த
உதிரம் மாற்றி, உறுத்திய புண்ணில்
தேனும் தளிரும் சேர்த்துப் பிசைந்து
பூசியே வருத்தம் போக்கினன். ஆங்கே
இத்தனை அன்பு காட்டினன் எனினும்
அவன்,
நோவு நொம்பலம் நோயின் தன்மை
இந்நாள் வரையிலும் யாதுஎன அறியான்.
ஆதலின்,
பறவையின் மீது பாய்ந்த அம்பின்
முனையைத் தனது முழங்கை யதனில்
அழுக்கிப் பார்த்தனன்; 'ஐயோ!' என்றனன்;
பரிந்து பின்னும் பறவையை எடுத்துத்
தாயினும் இரங்கித் தழுவி அணைத்தனன்.

## சேவகன் பறவையைக் கேட்டல்

சிறிது நேரம் சென்றபின், அங்கோர்
சேவகன் வந்து தெண்டனிட்டு, 'எங்கள்
அரச குமரன்ஓர் அன்னப் பறவையை
எய்து வீழ்த்தினன்; வீழ்ந்த இடமும்
மலர்மிகு ரோஜா வனமிது வேயாம்;
யாதும் தாமத மின்றி அவனிடம்
அன்னப் பறவையை அனுப்பிடு மாறுஇங்கு
என்னை உன்பால் ஏவினன்" என்றனன்

*சேவகன் மொழிஎலாம் சித்தார்த்தன் கேட்டு,*
*இயம்பிய மறுமொழி இயம்பக் கேண்மின்:* 1

## சித்தார்த்தன் மறுமொழி

(வேறு)

*'எய்த அம்பினால்—பறவை*
*இறந்து வீழ்ந்திடுமேல்,*
*எய்தவர்க்காகும்—உரிமை;*
*யாதும் ஐயமில்லை.* 2

*நீண்ட சிறகினிலே—விசைதான்*
*நின்றிருப்பதல்லால்,*
*மாண்டதில்லை அன்னம்—உயிர்த்து*
*வாழுகின்றதப்பா!* 3

*சந்தேகம் வேண்டாம்—அதனைத்*
*தரமுடியாதப்பா!*
*எந்த உயிரையும்—காப்பது*
*என் கடமையப்பா!'* 4

## தேவதத்தன் கூறுதல்

*சாற்றும் உரைகேட்டுத்—தேவ*
*தத்தனும் ஓடிவந்து,*
*சீற்றம் எழுந்தவனாய்—நின்று*
*செப்பும் மொழியிதுவாம்;* 5

*''மடிய நேர்ந்தாலும் உயிர்த்து*
*வாழ நேர்ந்தாலும்,*
*படியில் வீழ்ந்திடுமேல்—பறவை*
*பாணம் எய்ந்தவர்க்காம்.* 6

என்கை அம்பினால்—விழுந்த
இப்ப றவையினை,
சங்கை இல்லாமல்—இங்கே
தந்திடுவாய், ஐயா!'' 7

## சித்தார்த்தன் மறுமொழி

சொன்ன மொழிகேட்டான்—ஐயன்
துன்பம் மிகஅடைந்தான்;
அன்னப் பறவையினைக்—கன்னத்தோடு
அணைத்து வைத்துக்கொண்டான் 8

பாரில் உயிரையெல்லாம்—அருளால்
பாது காக்கவந்தோன்,
சீரிய நன்மொழிகள்—உள்ளம்
தெளிந்து கூறுகின்றான்: 9

''இல்லை இல்லையையா!—பறவை
என் பறவை ஐயா!
வல்லடி வழக்கு—நீயும்
வளர்க்க வேண்டாம், ஐயா! 10

தொல்லுலகமெல்லாம்—அருளால்
சொந்த மாக்கவந்தேன்;
வெல்லும் பொருள்களில்—முதலில்
வென்ற பொருளிதாம், 11

எம்மனிதருமே—உளத்தில்
இரக்க முற்றிடயான்.
செம்மை நெறியினை—நன்கு
தெரிந்து கூறிடுவேன். 12

துன்பம் அண்டாமல்—அதனைத்
துரத்தி ஓட்டிடுவேன்;
இன்பம் இவ்வுலகில்—நிலைக்க
என்றும் வென்றிடுவேன்! 13

மனிதர் மட்டுமல்ல—உலகில்
வாழும் எவ்வுயிரும்,
இனிய வாழ்வடையும்—வழியை
இனிது காட்டிடுவேன், 14

என்னுரைகளை நீ—மறுக்கின்,
இன்றே இப்பொழுதே,
மன்னும் நீதிமன்றம்—ஏறி
வழக்குரைப்போம், ஐயா!" 15

## நீதிமன்றம் அடைதல்

(வேறு)

இருவரும் அப்பால் இசையா ராகி,
அறநூல் கற்றோர் அறிவிற் பெரியோர்,
நடுநிலை நீதி நன்கு கண்டோர்
கூடிய மன்றில் குறைகொண்டு ஏகினர்.

ஏகவே,
வழுவற இருதலை வழக்கும் கேட்டு,
மன்றுளோர் தம்முள் வாதம் செய்தனர்;
இதுவே நீதியென்று இயம்பினர் சிலரே;
அதுவே நீதியென்று அறைந்தனர் சிலரே;
யாதும் துணியாது இருந்தனர் சிலரே;
முடிவில்,

இந்நாள் வரையிலும் எவருமே அறியாப்
புலமை மிக்க புரோகிதன் ஒருவன்.
எழுந்து நின்று, யாவருங் கேட்க. 16

## புரோகிதன் கூறுதல்

### வேறு

"உயிரைக் கொன்றிடவே—முயலும்
ஒருவ னுக்கு அந்த
உயிரின் மேலேதும்—உரிமை
உண்டோ? கூறும் ஐயா! 17

உயிரைக் காப்பவனே—என்றும்
உயிர்க்கு உடையவனும்;
அயர்வு வேண்டாம், ஐயா!—இதுவே
அறநூல் விதி ஐயா! 18

இன்னும் வீண்வாதம்—பேசி
இருப்பதேன்! ஐயா!
அன்னம் சித்தார்த்தன்—பொருளாம்
ஐய மில்லை, ஐயா!" 19

### வேறு

என்று நீதி எடுத்துரைச்செய்து
மன்றி லிருந்து மாய மாக
மறைந்து போயினன்; மறையும் அந்நேரம்,
பையர வொன்று பதுங்கி அவ்வழி
ஊர்ந்து செல்வதை ஒருவன் கண்டனன்,
சிற்சில காலை தேவரும் இந்த
வடிவந் தாங்கி வருவதுண்டு என்பரால்!
யாதோ உண்மை? யாவரே அறிவார்? 20

## 3. காதல் பிறந்த கதை

''அறிவின் செல்வரே! அமைச்சரே! நீவிர்
அசிதமா முனிவன் அந்நாள் உரைத்ததும்,
கணிநூல் கற்றவர் கணித்துச் சொன்னதும்
அறிவீர் என்பதில் ஐயமொன்று இல்லை,
என்னுயி ரனைய என்மகன் உலகில்
பகைக்குலம் வேரறப் பறித்துக் களைந்து
மன்னர் மன்னனும் மணிமுடி சூடித்
தரணி முழுவதும் தனியர சாளுவான்.
என்னுள் விருப்பமும் இதுவே யாகும்.
அன்றேல்,
ஆசையை அடியோடு அகழ்ந்து நீக்கி,
முற்றத் துறந்த முனிவ னாகி,
நாடு விட்டு நகரும் விட்டுக்
காட்டில் சென்று கடுந்தவம் புரிவான்;
பெறுதற் கரிய பெருந்திரு வெல்லாம்
இகழ்ந்து தவத்தால் எய்திடும் அந்த
இன்பம் யாதோ? யானெதும் அறியேன்.
ஆயினும்,
என்மகன் நோக்கம் இதுவே யாகும்;
அரண்மனைச் செல்வம் அனைத்திலும் ஆசை
சிறிதும் அவன்தன் சிந்தையில் இல்லை.
ஆதலின்,
நீள்நிலம் புரக்கும் நெறியின் மீது அவன்
உள்ளம் திரும்ப உபாயம் இதுவென,
ஆய்ந்து நீவிர் அறைதல் வேண்டும்
விரும்பிடில் இந்த மேதினி முழுதுமே
ஆளுவான் இவனென்று அறிஞர் அந்நாள்
ஓதிய மொழியும் உண்மை மொழியாய்
நெடுநாள் இங்கு நிலைத்திடல் வேண்டும்,''
என்று மன்னன் இயம்பினன். அதுகேட்டு

அமைச்சர் நாயகன் அறமுது கிழவன்
எழுந்து நின்று, ''எம் இறைவனே, கேளாய்;
ஈதொரு சிறுநோய்; இந்நோய் நீங்கிடக்
காதலைப் போலொரு கைகண்ட மருந்துஇம்
மேதினி மீது வேறெதும் இல்லை.

மைந்தன் உள்ளம் மங்கையர் மையலில்
திளைத்து மூழ்கச் செய்திடல் வேண்டும்:
அண்ணலே! நின்மகன் அறியாச் சிறுவன்;
மங்கையர் மதிமுக வனப்பின் தன்மையும்
அவர் கருவிழி யாம்கூர்ங் கணையின் கடுமையும்

அவர் அதரத் தூறும் அமுதின் இனிமையும்
இந்நாள் வரையிலும் ஈதுஎன அறியான்;
அதனால்,
மனத்துக்கு இனிய மனைவிய ரோடு
தோழர் தோழியர் சூழ்ந்திட அவனை

வாழ வைப்பதே மாண்புறு செயலாம்;
இரும்புத் தொடரையும் எறிந்து செல்லும்
ஆடவர் மனமெனும் மத்த யானைஓர்
மங்கை இட்ட மயிரிழை அதனுக்கு
அடங்கி நின்றிடும்; ஐயமொன்று இல்லை''

என்று கூறி இருந்தனன். இதனை
ஆமென்று அனைவரும் ஆமோதித்தனர்.
அப்பால்,
அரசர்க் கரசன் அமைச்சரை நோக்கி,
''மைந்தனுக் குரிய மங்கையர் மணியினை

யாமே தேர்தல் இசைவில தாகும்;
காதலன் தன்னிரு கண்களால் கண்டு
தேர்ந்து தெளிவதே சீரிய முறையாம்;
மங்கைய ராகிய மலர்கள் நிரம்பிய
நந்த வனத்தில் நடுவே அவனை

நிறுத்தி, "ஐயா! நின்னுளம் விரும்பிய
பருவ மலரைப் பறித்துக் கொள்" எனில்
அவன், இன்பம் அறியா இளைஞன் ஆதலின்,
புன்னகை புரிந்து, புதுமலர் ஒன்றும்
தீண்டாது அப்பால், சென்றிடில் என்செய்வோம்?"

என்று கூறினன். இவ்வுரை கேட்ட
அமைச்சருள் ஒருவன் அறிவில் சிறந்தோன்
"அம்புவி ஆளும் அரச! கேண்மோ!
தொடுசரம் உடலைத் துளைத்திடும் மட்டுமே
முடங்குளைச் சீயம் முழங்கித் திரியும்;

மங்கையர் அழகிய மதிமுகம் கண்டு
மயங்கா மனிதர் இவ் வையகத்து இல்லை;
உதய குமரியை ஒத்தஓர் கன்னியின்
மைவிழி கண்டு மயங்குவன் நின்மகன்;
ஐயம் இல்லை; ஆதலின் அடியேன்

செப்பும் காரியம் செய்வது நலமாம்.
விரைவில் இங்கொரு விழாக்கொண் டாடுக.
விழாவுக் காகஇவ் வியனக ரத்துள்
அழகிய கன்னியர்க்கு அழைப்பு விடுக்க
அப்பால்,

சாக்கிய நாட்டுத் தனிச்சிறப் புடைய
ஆடல் பாடல் அனைத்திலும் அவர்கள்
கற்ற திறனெலாம் காட்டச் செய்க,
செய்தபின்,
அழகில் இளமையில் ஆடல் பாடலில்

சிறந்தவர் தமக்குச் சிற்சில பரிசுகள்
நின், மைந்தன் கையால் வழங்கிடச் சொல்க,
பரிசுகள் பெறஅவன் பக்கம் வந்துசெல்

அழகி எவளால் அவனது திருமுகம்
வாட்டம் நீங்கி மலர்ச்சி பெறுமோ

அவளே ஐய! நம் அரசிளங் குமரன்
வாழ்க்கைக் குரிய மனைவி யாவாள்.
காதல் கொண்டவன் காதற் கண்ணால்
கண்டு தெரிந்த காரிகை யோடு
வாழ விரும்புதல் வையகத்து இயல்பாம்''

என்று கூறி இருந்தனன், இதுவே
நன்று நன்றென நவின்றனர் யாவரும்
அப்பால்,
''திக்கெலாம் புகழும் திருவோ லக்க
மண்டபம் அதனில் மகிழ்ச்சி தரும்ஓர்

காட்சி காணக் கருதினன் மன்னன்.
அதனால்,
இந்நாட் டுள்ள எழில்மிகு கன்னியர்
அனைவரும் நாளை அரண்மனைக்கு ஏகுமின்.
அழகிய கன்னியர்க்கு அரசிளங் குமரன்

பரிசுகள் பற்பல பரிவொடு வழங்குவன்;
வனப்பில் மிக்க மங்கையர் மணிஇப்
பாரெலாம் புகழும் பரிசினைப் பெறுவர்;
ஈதுஎம் இறைவன் இட்ட கட்டளை''
என்று மன்னவன் ஏவலர் ஒருநாள்

பட்டண மெங்கும் பறைகள் சாற்றினர்.
அதுகேட்டு,
அந்நக ரத்துள அழகிய கன்னியர்
வைகறை எழுந்து மஞ்சனம் ஆடி
ஆடை அணிகள் அழகாய் அணிந்து

கூந்தல் வாரிக் கொண்டை முடித்து
மல்லிகை முல்லை மாலை சூடி
வடிவேல் விழிக்கு மையும் இட்டுத்

திருந்திய நெற்றியில் திலகமும் தொட்டுச்
சிற்றடி சிறந்திடச் செம்பஞ்சும் ஊட்டி
மணவறை ஏறும் மங்கையர் போல
மன்னவன் கோயில்முன் வந்து கூடினர்.
அந்நாள்.
பொற்சிங் காதனம் பொலிவுற அமர்ந்த
அரசிளங் குமரனை அஞ்சன விழிகள்
நிமிர்ந்து நோக்காது நிலத்தையே நோக்க,
வரிசையாய் மங்கையர் வந்து வந்து
பரிசுகள் பெற்றுப் பணிந்துசெல் காட்சி
யாவரும் நோக்கி இன்புறற்கு உரியதாம்.
வந்து கண்ட மங்கையர் உள்ளம்ஓர்
நிலையில் நில்லாது அலையச் செய்தது
திருவளர் செல்வன் திருமுகப் பொலிவோ!
அப்பால் யாதோ? அறிபவர் யாரே?
மன்னர் மகனோ, மனத்தில் சலனம்
யாதும் இன்றி இருந்தனன்; அவன்முகம்
சாந்தமும் அமைதியும் தண்ணிய அருளும்
தவமும் காட்சியே தந்தது; ஆயினும்,
அவன் கன்னியர்க்கு எட்டாக் கனியே ஆயினேன்.
கூடி நின்றவர் குமரி ஒருத்தியை,
"இவள்; அழகிற் சிறந்தவள்; ஐயமில்லை,
அரசிளங் குமரன் அன்பிற்கு உரியாள்
இவளே யன்றி வேறு யாவரும் உளரோ?"
என்று புகழுரை இயம்பவே; அதனால்
மங்கை அவளும் மனந்தடு மாறி
நடுக்க முற்றஓர் நலியே போல
அரியா சனத்தின் அருகில் சென்றும்
வழங்கும் பரிசினை வாங்கிடாது ஓடிச்
சேடிய ரோடு சேர்ந்து நின்றனள்
அத்தனை ஜோதி! அத்தனை மகிமை!
அத்தனை தெய்வ அருட்கலை பொலிந்தது

அரசிளங் குமரன் அழகிய திருமுகம்!
இவ்வாறு அந்நகர் எழிலுறு மங்கையர்
ஒருவர்பின் ஒருவராம் உலகாள் மன்னவன்
மைந்தனைக் கண்டு வணங்கிச் சென்றனர்.
இருந்த பரிசுகள் யாவும் மீதி

ஒன்றுமே யில்லாது உதவப் பட்டன.
அப்பால்,
அங்கயற் கண்ணி அழகின் செல்வி
திங்களைப் பழிக்கும் திருமுக விலாசினி
பங்கய மீதெழாப் பாக்கிய லட்சுமி

யசோதரை என்னும் யௌவன குமாரி
நேரெதி ராக நிமிர்ந்து நோக்கி
வருவது கண்டு மன்னர் மகனும்
திடுக்கிட்டு உள்ளம் திகைப்புக் கொண்டனன்.
இதனை, பக்கம் நின்ற பலரும் கண்டனன்.

இவள் "எனக்குப் பரிசெதும் ஈவதற்கு? இல்லையோ?"
என்று கூறி இன்னகை புரிந்தனள்.
"இருந்த பரிசுகள் யாவும் போயின;
ஆயினும்,
மாநகர் போற்றும் மங்கையர் மணியே!

இதனைப் பரிசாய் ஏற்றுக் கொள்" எனத்
தன், மார்பிற் கிடந்த மரகத மாலையைக்
கழற்றி யசோதரைக் கன்னியின் அழகிய
திருவரை சுற்றிச் சேர்த்துக் கட்டினன்.
கட்டவே,

கண்களும் கண்களும் கலந்து பேசின.
கண்களும் கண்களும் கலந்து
பேசின பேச்சில் பிறந்தது காதலே.

## 4. சித்தார்த்தன் கேட்ட தேவகீதம்

[ஒரு நாள் சித்தார்த்தன் யசோதரையின் அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிறான். அழகிய வீணை யொன்று ஒருபுறத்தில் இருக்கிறது. காற்று வீசும் பொழுது அந்த வீணையிலிருந்து ஒலி உண்டா கிறது. அந்த ஒலியில் கலந்திருக்கும் தேவகீதம் சித்தார்த்தனுடைய செவிக்கு மட்டும் கேட்கிறது. தேவகீதத்தில் பொதிந்துள்ள விஷயத்தைப் பின் வரும் பாடலில் காணலாம்.]

தேடும் இடங்களெல்லாம்—ஓய்வு
தேடியும் காணுமல்
ஓடி ஓடி அலையும்—காற்றின்
ஒலியே நாங்கள், ஐயா! 1

ஆன்ற புவிவாழ்வும்—எண்ணில்
அற்ப வாழ்வேயாம்;
தோன்றும் ஒருமூச்சாம்—புயலாம்
சூறு வளியேயாம். 2

இந்த உயிர்களெல்லாம்—பிறக்கும்
இடமும் எவ்விடமோ?
இந்த உயிர்களெல்லாம்—மீள
ஏகும் இடம் எதுவோ? 3

எங்கிருந்து வந்தோம்?—நாங்கள்
எதனுக் காகவந்தோம்?
இங்கிவ் உண்மையெலாம்—அறிவார்
எவரு மேயுண்டோ? 4

ஒத்த பிறப்பாகும்—நாங்களும்
உங்களைப் போல,
சுத்த சூனியத்தில்—நின்று
தோன்றிய ஆவிகளாம் 5

மாறி வருந்துயரால்—இன்ப
வாழ்வே நமக்கு இல்லை;
தேறும் அறிஞனே நீ—உண்மை
தெரியக் கூறுகின்றோம். 6

நித்திய ஆனந்தத்தை—அரசே!
நீயும் அடைவதுண்டோ?
சித்தத் தெளிவுடையாய்—சிறிது
சிந்தனை செய்திடுவாய். 7

அன்பு இருக்குமெனில்—அதிலும்
அளவறியவொண்ணு
இன்பம் எய்திடலாம்—ஐயம்
யாதுமேயில்லை. 8

கண்ட வாழ்விதுதான்—நிலையாக்
காற்றின் வாழ்வேயாம்;
கொண்ட தந்தியின்மேல்—எழும்
குரலே போன்றதுவாம். 9

சால வேஉலகம்—துயரால்
தளர்ந்து வாடுதையா!
மாலை மாலையாய்க்—கண்ணீர்
வடிய விடுகுதையா! 10

வாழ்வு மாயமெனும்—உண்மை
மனத்திற் கொள்ளாமல்,
நாளும் நைந்திடுதல்—எமக்கு
நகைப்பே தருகுதய்யா! 11

நீல மேகந்தான்—ஆணையால்
நிலையில் நின்றிடுமோ?
காலத் தோடும்நதி—கையால்
தடுக்க மாறிடுமோ? 12

துன்பச் சுழியிலே—விழுந்து
சுழலும் உலகத்தை
இன்பக் கரையேற்ற—நீயும்
இரங்கிட வேண்டும். 13

வையம் முழுவதையும்—காக்க
வந்திங் கவதரித்த
ஐயனே! ஆளுதற்குக்—காலம்
அணுகி வருகுதைய்யா! 14

'என்று வந்திடுவான்—ரக்ஷகன்
எவ்விடம் தோன்றிடுவான்'
என்றுஇப் புவியெலாம்—நோக்கி
எதிரே நிற்குதைய்யா! 15

கண்ணிலா உலகம்—இடறிக்
கவிழ்ந்து வீழாமல்,
அண்ணலே எழுந்து—விரைவில்
அருள வேண்டுகின்றோம். 16

இன்னும் தூங்காமல்—வெளியில்
இறங்கி வந்திடுவாய்
அன்னை மாயை தரும்—இனிய
அரசிளங் குமரா! 17

ஓய்வு கண்டிடவே—எமைப்போல்
ஓடி ஓடி அலைவாய்;
தாயும் தந்தையுமாய்—உலகைத்
தாங்க வந்தோனே! 18

உலகின் உண்மையை நீ—இன்னும்
உணர்ந்திட வில்லை,
அலகில் கருணையால்—உயிரை
ஆள வந்தோனே! 19

அன்பருக்காக—ஆசை
அறுத்திட வேண்டும்;
துன்பம் நீங்கிடவே—அரசும்
துறந்திட வேண்டும். 20

மாயப் பொய்மைகளைக்—கண்டு
மயங்கி டாதே, ஐயா!
நேய மாகஉண்மை—நாங்கள்
நிகழ்த்த வந்தோம், ஐயா! 21

## 5. சித்தார்த்தன் துறவு

[பள்ளியறையில் யசோதரை கனாக் கண்டு "காலம்வந்தது" என்று வாய் புலம்புகிறாள். சித்தார்த்தன் அதைக் கேட்டுக் கவலையிலிறங்கி, வானில் நட்சத்திரங்களைப் பார்க்கிறான். உரிய காலம் வந்தது என்றறிந்ததும் துறவு பூணத் துணிகிறான்.]

பள்ளி யறையில் பஞ்சணை மீதில்
அங்கையற் கண்ணி யசோதரை அயர்ந்து
கண்வளர் வேளைஓர் கனவு கண்டு,
'வந்தது காலம் வந்தது' எனவே
மயங்கிப் புலம்பினள்; வார்த்தை கேட்டு;
விரைவில் எழுந்து வெளியில் இறங்கி,
மன்னர் குமரன் வானை நோக்கினன்.
சந்திரன் கடகம் தங்கி யிருந்தனன்,
வானில்,
மற்றைக் கோள்களும் மற்றைய நிலைகளில்
ஒத்து நின்றுஅங்கு உரிய காலம்
உதித்த தென்ன உணர்த்தின; அவைஎலாம்
அருள்வடி வாகிய அண்ணலை நோக்கி,
"இரவும் இதுவே, இரவும் இதுவே;
பெருமை பெறும்வழி பேணுகின் றனையோ?
நன்மை தரும்வழி நாடுகின் றனையோ?
மணிமுடி தாங்கி மன்னர் மன்னனாய்
நீள்நிலம் புரக்க நினைக்கின் றனையோ?
உலகி லுள்ள உயிரெலாம் உய்ய
நாடும் இழந்து நகரும் இழந்து
வீடும் குடியும் விட்டவ னாகி
தன்னந் தனியே தரணியின் மீதுஓர்

ஆண்டி யாக அலைந்து திரிய
எண்ணுகின் றனையோ? யாதுஉன் விருப்பம்?
தெளிந்துநீ உள்ளம் தேறு வாய்'' எனக்
கூறின; அவனும் குறிப்பின் உணர்ந்தனன்.
எங்கும் மூடி இருண்ட இருளில்
காற்றொடு முன்னம் கலந்து வந்த
தெய்வ கீதமும் செவியுறக் கேட்டனன்.
ஐய மில்லை, நம்ஐயன் தங்கிய
அரண்மனை யதனில் அந்நாள் இரவில்
தேவரும் நான்கு திசையும் சுற்றி
மறைந்து நின்று வாழ்த்தினர் அம்மா!
"இதுவே காலம்; இதுவே காலம்;
இமைப்பொழு தேனும் இனியான் இங்குஇரேன்''
யாதும் தடையிலை; இறங்கிச் செல்வேன்;
'பிரியா நாம்இனிப் பிரிவோம். ஆயினும்;
குறையொன்று அதனால் கூறுதற்கு இல்லை.
இருநில முழுதும் இன்பம் அடையும்
அறநெறி ஈதுஎன்று அறிந்து வா' என
ஆணை யிடுவதை அழகின் செல்விநீ
நித்திரை செய்யினும் நின்முகம் நோக்கித்
தெளிவுற யானும் தெரிந்து கொண்டனன்;
இனியான் உலகில் இயற்றுதற் குரிய
அரும்பெருஞ் செயல்கள் அனைத்தும் அவ்வானில்
உடுக்கள் என்ன ஒளிவிடும் எழுத்தில்
எழுதி யிருப்பதை இன்றிங்கு என்இரு
கண்களால் கண்டு களிப்படை கின்றேன்!
இறுதி யாக என்னுளங் கொண்ட
உண்மையும் ஈதாம் உறுதியும் ஈதாம்
பற்பல ஆண்டுகள் பகலும் இரவும்
ஆராய்ந் தாராய்ந்து அறிந்ததும் ஈதாம்;
படியில் எனக்குப் பரம்பரை யாய்வரும்

முடிமீது ஆசை முழுவதும் விட்டேன்,
வாழும் மன்னரை வாட்கு இரை யாக்கி,
நீள்நிலம் பற்றும் நினைப்பும் ஒழித்தேன்;
பூதல மெல்லாம் போர்க்களம் ஆக்கிய
பாதகன் என்றுஎனைப் பழித்துஎவ ருஞ்சொல,
ஓடி ஒழுகும் உதிரப் பெருக்கில்
தேர்க்கால் புதையத் திசைதொறும் சென்று
வெற்றிமேல் வெற்றி வென்று; வீர
வெற்றி மாலை மிலைந்திட விருப்பம்
எள்ளள வேனும்என் உள்ளத்து இல்லை.
சிறுமை தந்திடும் தீவினை புரியேன்;
பொறுமை நிதமும் போற்றி ஒழுகுவேன்;
புழுதி நிறைந்த பூமி எனக்குப்
பழுதி லாத பஞ்சணை யாகும்.
பாழிட மான பாலையை நல்ல
வாழிட மாக மதித்து வாழ்வேன்;
ஏழைப் பிராணி எதனொடும் அன்பாய்த்
தோழமை பூண்டு துணைசெய் திடுவேன்;
பணிசெய் பள்ளர் பறையர் அணியும்
துணியை அரையில் சுற்றித் திரிவேன்;
தெருத்தெரு வாகத் திரிந்து பெற்ற
பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன்.
குன்றும் குகையும் குத்துச் செடியும்
அன்றி வேறெதும் அணைடி ஒதுங்கேன்;
இரவும் பகலும் எவ்வெப் பொழுதும்
பாரில் உயிர்கள் படுந்துய ரெல்லாம்
புகுந்துஎன் உள்ளம் புண்படு கின்றது.
ஆதலின்,
இன்ப வாழ்வை இகழ்ந்து நீக்கினேன்;
துன்ப வாழ்வைத் துணிந்து போற்றினேன்.
சிறிய பெரிய தேவர் தம்முன்

எல்லாம் வல்லார் எவரும் உளரோ?

இரக்க முள்ளார் இருக்கின் றனரோ?
கண்ணால் அவரைக் கண்டவர் உண்டோ?
வணங்கி நித்தம் வழிபடு வோர்க்குஅவர்
செய்திடும் நன்மை சிறிதும் உளதோ?
எத்தனை எத்தனை எத்தனை மனிதர்—

காலை மாலை கண்கள் இரண்டும்
மூடி யிருந்து முணுமுணு வென்று
செபங்கள் நிதமும் செபித்திடு கின்றனர்?
கோபுரம் சிகரம் கொடிமர மெல்லாம்
வானுற ஓங்கி வளரும் ஆலயம்

அழகழ காக அமைத்திடு கின்றனர்?
மந்திரம் போனகம் வாடா விளக்குஇவை
நித்தம் நடைபெற நிலம்விடு கின்றனர்?
துடிக்கத் துடிக்கத் துள்ளும் மறிகளைப்
பகுத்தறி வின்றிப் பலியிடு கின்றனர்.

அன்ன சாலையில் அந்தணர் நிதமும்
உண்டு களிக்க உணவிடு கின்றனர்!
அன்னியர்க்கு அல்ல அடியவர்க்கு எனினும்
இவ்வுல கதனில் யாதும் ஒருநலம்
செய்தறி யாத தேவரை நோக்கிக்

'கங்கா தரனே, கண்ண பிரானே!
காப்பாய் காப்பாய் காப்பாய்' என்ன,
(அன்பின் மிகுதியோ அச்சமோ அறியேம்)
தொழுது போற்றும் தோத்திரப் பாக்கள்
வானில் முழங்கும் வல்லிடி போல

என்றும் என்றும் எழுந்திடு கின்றன!
இவற்றால்,
வாழ்க்கையில் நித்தம் வளருந் துயரோ?—
ஆசைப் பொருளை அடையாத் துயரோ
இருந்த பொருளை இழந்த துயரோ

நோய்வாய்ப் பட்டு நொந்திடு துயரோ
நரைதிரை மூப்பால் நண்ணுந் துயரோ
மாறாக் கொடிய மரணத் துயரோ
சனன மரணச் சக்கரம் சுழன்று
பின்னும் பின்னும் பிறந்து பிறந்து
உயிர்கள் அடையும் ஓயாத் துயரோ—
யாதும் ஒருதுயர் இம்மி யளவும்
நீங்கி எவரும் நித்திய னந்த
வாழ்வடைந்து இங்கு வாழ்வதும் உண்டோ?
அருமை மங்கையர் அன்பு நிறைந்து
நோற்கும் பற்பல நோன்புக ளாலும்
பாடும் தோத்திரப் பாடல்க ளாலும்
எய்திய நன்மை யாதும் உண்டோ?
அவர்,
தூர்த்து மெழுகித் துப்புர வாக்கித்
துளசி மாடம் தொழுவத னாலும்,
பாலும் பழமும் பணிகா ரங்களும்
பக்தி யோடு படைப்பத னாலும்
பேறு காலம் பெறுநோக் காடு
கொஞ்ச மேனும் குறைந்தது உண்டோ?
திருந்திய நல்ல தேவரும் உண்டு;
தீயரும் அவருள் சிற்சிலர் உண்டு;
உண்மை இதுவென்று உணர்வதும் அரிதாம்,
ஆயினும்,
யாவரும் செய்கையில் எளியவ ரேயாம்.
முன்னைப் பிறப்பும் முடிவும் அப்பால்
பின்னைப் பிறக்கும் பிற பின் விளைவும்,
ஐயம் இன்றி அறிகுவ ரேனும்,
இவர்,
சனன மரணச் சக்கர மதனில்

சிக்கிச் சுழன்று திகைப்புறு வோரே,
உலகில் வாழும் உயிரின் பிறப்பிடம்
அறிவிற் கெட்டா தாயினும், அவ்வுயிர்,
படிப்படி யாய்இப் படியின் மீதுஓர்
அணுவாய்க் கோசுவாய் அரிக்கும் புழுவாய்

பாம்பாய் மீனாய்ப் பறவையாய் மிருகமாய்
மனிதனாய்ப் பூதமாய் வானுறை தேவனாய்த்
தெய்வமாய்த் தோன்றித் திரும்பவும் அவ்வழி
மண்ணாய் அணுவாய் மாறுதல் இயல்பாம்,
ஆதலின்,

புவிமீ துள்ள பொருள்கள் அனைத்தும்
சுற்றம் போலத் தொடர்புடை யனவே.
அஞ்ஞா னத்தில் அழுந்தி அழுந்தி
நைந்து நொந்து நடுங்கி நிதமும்
உழலும் மனிதர் உய்யும் வழியினைக்

கண்டொரு மனிதன் காட்டிடின், அதனால்
இவ் வையகம் முழுவதும் வாழ்வது திண்ணம்.
கல்லில் முன்னம் கரந்து கிடந்த
எரியினைத் தட்டி எழுப்பி ஒருவன்
காட்டிய நாள்வரை, கடுங்கால் மாரி

வாடையில் மக்கள் வருந்தி நைந்தனர்;
பருவ மறிந்து பயிர்செய் தொருவன்
தானியம் எடுத்துத் தருவதன் முன்னம்
உழுவை போல ஊனை உண்டு
மனிதனும் உலகில் வாழ்ந்து வந்தனன்.

பாரிற் பேசிப் பழகும் மொழிதான்
ஒருவன் நாவில் உருப்பெறும் முன்னம்,
ஏட்டில் எழுதும் எழுத்தின் வடிவை
ஆராய்ந் தாராய்ந் துஅமைப்பதன் முன்னம்,
மனிதர்,

ஊமைகள் போல உளறித் திரிந்தனர்.
கையால் சாடை காட்டி அலைந்தனர்.
ஆழ்ந்து கண்ட அறிவி னாலும்
ஓயா துழைக்கும் உழைப்பி னாலும்
தேர்ந்து செய்யும் தியாகத் தாலும்

அன்றிஓர் நன்மைஇவ் அகில மீது
மனிதர்க்கு என்றும் வாய்த்ததும் உண்டோ?
ஆதலின்,
உடலின் உறுதியும் ஊக்கமும் உடையோன்—
பொருளும் புகழும் புத்தியும் உடையோன்,

காசினி யாளக் கருதுவ னேல்ஓர்
மன்னர் மன்னனாய் வாழுதற் குரியோன்,
குலத்திற் பிறந்த குணந்திகழ் கோமான்,
வாழ்வில் ஓய்ந்து மனந்தள ராமல்
ஆதன்;

இன்பத் துறையில் இறங்கி நிற்போன்,
விஞ்சிய காதல் விருந்தை அருந்தி
அமையா தெங்கும் ஆசை யுடையான்,
நரையும் திரையும் மூப்பும் நண்ணி
வெறுப்பு மிகுந்த விரக்த னாகாது

நன்மை தீமைஎந் நாளும் ஒன்றாய்க்
கலந்து தங்கும்இக் காசினி மீது
வாழ்வதில் மிக்க மகிழ்ச்சி யுடையோன்,
புவியில் அழகிய பொருளைத் தெரிந்து
சொந்த மாக்கிடச் சுதந்திர முடையோன்,

தனக்கென வாழாத் தரும சீலன்—
என்றும் மக்கள் ஏத்துதற் குரிய
மனிதன் ஒருவன் மண்ணில் தோன்றி
அருளால் அனைத்தும் அறவே யொழித்து, இவ்
வைய மீது மானிட ரெல்லாம்
உய்யும் வழியை உணர்த்தும் மந்திரம்

பாதலம் அதனில் பதுங்கிக் கிடப்பினும்
இவ்வுல கத்தினில் யாரும் இதுவரை
அஞ்ஞா னத்தால் அறியா திருப்பினும்,
ஓய்வொழி வின்றி உழைத்திடு வானேல்,

எந்நா ளாயினும் எவ்விடத் தாயினும்
வெளியாம்; நன்கு விளங்குதல் திண்ணம்.
தேடின கண்கள் தெரிசனம் செய்யும்;
நடந்த கால்கள் நன்னிலம் சேரும்;
பண்ணிய தியாகம் பழுதா காது;
இவனே,

காலனை வென்ற காலனும் ஆவான்;
யான்இது செய்வேன்; யான்இது செய்வேன்;
தியாகம் செய்யத் தேசமொன் றுண்டு
அறிந்த மக்களே ஆயினு மாகுக;

அறியா தவரே ஆயினு மாகுக;
செய்திடத் துணியும்இத் தியாக மதனால்
எண்ணிலா மக்கள் இன்பம் அடைவர்;
இந்நாட் டுள்ள யாவ ருளத்தும்
துடிக்கும் ஒவ்வொரு துடிப்பொடும் என்றன்

உள்ளமும் ஓயாது ஒத்துத் துடிக்கும்;
அழைத்து நிற்கும் அரிய சுடர்களே!
வருகின் றேன்இதோ! வருகின் றேன்இதோ!
அழுது புலம்பி அரற்றும் புவியே!
மகிழ்ந்து நீயும்உன் மக்களும் வாழ,

என்குடி என்கிளை என்வாழ்வு என்சுகம்
என்இளம் பருவம் என்சிங் காதனம்
யான்வாழ் அரண்மனை யாவும் வெறுத்தேன்.

## விடை கொள்ளுதல்

'வெறுத்தற் கரிய விண்ணமு தே! என்
அன்பின் உருவே! அசோதரை நங்காய்!

## சித்தார்த்தன் துறவு

உன்னையும்,
மறந்து செல்ல மனந்துணி கின்றேன்;
ஆயினும்,
நீள்நிலம் உய்ந்திட நீயும் உய்குவை;
காரிகை யேநம் காதலில் மலர்ந்த

மலரென உன்தன் வயிற்றினில் வளரும்
மகவினைக் கண்டு வாழ்த்துதற் குரிய
காலம் வரும்வரை காத்து நிற்போனல்,
மனத்தில்,
கொண்ட உறுதி குலைந்து போய்விடும்.

உண்மை ஞானம்இவ் வுலகெலாம் ஒளிரச்
செய்வதென் கடனும், சிறிது காலம்
பிரிகின் றேன்,இதில் பிழையெதும் இல்லை,
வாய்த்த மனைவியே! வயிற்று மகவே!
தந்தையே! தமரே! தரணி மாந்தரே!

பொறுத்திட வேண்டும்; பொறுத்திட வேண்டும்.
பொறுத்துக் கொள்வது புண்ணிய மாகும்
உள்ளம் தேறினேன்; உறுதியும் கொண்டேன்,
இனியொரு கணமும் இங்குத் தங்கிடேன்.
யாதுந் தடையிலை; இறங்கிச் செல்வேன்.

நீள்நில மீது நித்தியா னந்த
வாழ்வை யடையும் வழிஇது வென்று
தீவிர மான தியாகத் தாலும்
ஓய்வில் லாத உழைப்பி னலும்
அறியலா மென்னில் அறிந்து வருவேன்;

வாடி வருந்தி மன்னுயி ரெல்லாம்
அடையும் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்''
என்று கூறி இரவில் இறங்கினன்,
நன்று நாடிய ஞானிசித் தார்த்தனே.

# 6. புத்தரும் ஏழைச் சிறுவனும்

[அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச்சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.]

## புத்தர் மயங்கி வீழ்தல்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்துஇவ் வுலகினில் என்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதரை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி,
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடாது எங்கும்
நடந்து மெலிந்து நலிவுற்று ஒருநாள்
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பில் ஊச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன். 1

## சிறுவன் காணுதல்

### வேறு

ஆடுகள் மேய்த்து வரும்—ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான். 2

## அவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி அருகில் நட்டான். 3

தெய்வ குலத்திவனை—எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே—சிறிது
சிந்தை தயங்கி நின்றான். 4

உள்ளந் தெளிந்துடனே—வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து,
வள்ளல் மயக்கொழிய—மடுவை
வாயில் கறந்துவிட்டான். 5

நட்ட தழைகளெல்லாம்—வளர்ந்து
நாற்புற மும்கவிந்து,
கட்டிய மாளிகைபோல்—வனத்தில்
காட்சி யளித்தஅம்மா! 6

பூவொடு காய்கனியும்—தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள்—இழைத்த
விதானமும் ஆனஅம்மா! 7

ஐயனை இவ்வுலகம்—காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான்—சிறுவன்
களங்கமிலா வுளத்தான் 8

## புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற்கிடந்த ஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
"கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய்" என்றான். 9

## சிறுவன் மறுத்தல்

"ஐயையோ! ஆகாது" என்றான்—சிறுவன்,
அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையன் ஓர்
காட்டு மனிதன்" என்றான். 10

## புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ்பெரியோன்—இந்த
உரையினைக் கேட்டுஅந்நாள்
அலகில் கருணையினால் சொன்ன
அமுத மொழிஇதுவாம்: 11

"இடர் வரும்போதும்—உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வார், அப்பா! 12

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோஅப்பா? 13

எவர் உடம்பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்விழி நீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா! 14

நெற்றியில் நீறும்—மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றுஇவ் உலகுதனில்—எவரும்
பிறந்த துண்டோ அப்பா! 15

பிறப்பினால் எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டும், அப்பா! 16

நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.” 17

## சிறுவன் பால் தருதல்

நிலத்துயர் ஞானி—இவை
நிகழ்த்தி, “என்தம்பீ
கலத்தினிலே கொஞ்சம்—பாலைக்
கறந்து தா” என்றான். 18

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 19

# 7. கருணைக் கடல்

[அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளிப் பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காகக் கொண்டு போகப்பட்ட ஆட்டு மந்தையில் மத்தியில், துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியைத் தம் தோளில் சுமந்து கொண்டு சென்று, யாகசாலையை அடைந்து, மன்னனுக்கு அறவுரை போதித்து, நாடெங்கும் உயிர்க்கொலையை நிறுத்திய வரலாறு இதனுள் கூறப்படுகிறது.]

## ஆட்டுமந்தையைக் கண்டு இரங்குதல்

மந்தை பெரியமந்தை—உணவின்றி
வாடி மெலியும் மந்தை,
சிந்தை தளரும் மந்தை—நடக்கவும்
சீவ னிலாத மந்தை. 1

கண்ணிலே கண்டபுல்லை—நின்றொருவாய்
கௌவிட வொட்டாரையோ!
தண்ணீர் குடிப்பதற்கும்—விலகிடச்
சம்மதி யாரேஐயோ! 2

காடு மலைகளெல்லாம்—ஓடியோடிக்
கால்களும் ஓய்ந்தனவோ!
ஆடுக ளாயினும்—எவரிவ்
அநியாயம் செய்வரையோ! 3

தன்னந் தனியாகி—ஒருமறி
தாவிமுன் ஓடுதையோ!
பின்ஓர் இளமறியும்—கிந்தியிங்கு
பீடைப் படுதேஐயோ! 4

---

4. கிந்துதல்—நொண்டி நடத்தல்

கல்லெறி கொண்டதுவோ?—விழுந்தொரு
கால்முட மானதுவோ?
செல்லும் வழிநீள—உதிரமும்
சிந்தப் பெருகுதய்யோ! 5

ஓடும் மறிதேடித்—தாயுமுன்னில்
ஓரடி வைத்தவுடன்,
வாடும் மறியை எண்ணி—விரைந்துபின்
வந்து தயங்குதையோ! 6

## தாயாட்டின் துயர் போக்குதல்

வேறு

இத்தனையும் கண்டுமனம் இரங்கி, நொண்டும்
இளமறியை இருகரத்தின் எடுத்து, வையம்
அத்தனையும் தாங்குபுயம் அணிய ஏந்தி,
அருளுருவாம் அண்ணலும் அத்தாயை நோக்கி;

வேறு

"அல்ல லுறவேண்டாம்—இனித்துயர்
ஆறி வருவாயம்மா!
செல்லுமிடத்தில் உன்தன்—மதலையைச்
சேர்த்து விடுவேனம்மா. 8

ஏழைப் பிராணிகளின்—இடர்களைந்து
இன்ப மளிப்பதுபோல்,
வாழும் உலகிதனில்—செயுமொரு
மாதவம் வேறுமுண்டோ? 9

மீளாத் துயர்க்கடலில்—உயிரெலாம்
வீழ்ந்து முழுகையிலே,
பாழாங் குகைதேடிச்—செயுந்தவம்
பாவமே ஆகுமம்மா!" 10

## இடையரைக் கண்டு வினவுதல்

### வேறு

என்றுகனிந் துளமுருகி எழுந்த காலை,
எமன்விட்ட தூதுவர்போல் ஆட்டை யெல்லாம்
குன்றிருந்து துரத்திவரு மவரைக் கண்டு,
குவலயத்தில் அருள்மாரி பொழியும் ஐயன் : 11

### வேறு

"மாலைப் பொழுதின்னும் ஆகவில்லை—வெயில்
மண்டை பிளந்து வெடிக்குதையோ!
சாலை வழிஇந்த ஆடுகளும்—எங்கு
சாய்ந்து செலுமையா கூறும்" என்றான். 12

## இடையர் மறுமொழி கூறுதல்

அம்மொழி கேட்டவ் விடையருமே—"எம்மை
ஆளும் இறைவன தாணையினால்,
செம்மறி நூறு, வெள் ளாடும் ஒருநூறு
சேர்த்து வருகிறோம்" என்றுரைத்தார். 13

இன்றிரா யாகம் முடியுதென்றார்—அதில்
இத்தனை யுங்கொலை யாகும்என்றார்;
நின்றுசொல நேரம் இல்லைஎன்றார்—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்என்றார். 14

வள்ளலும் உள்ளம் வருந்தி, யானும்—அந்த
மாமகம் காண வருவேனென்று,
துள்ளும் மறியுஞ் சுமந்துகொண்டு—தாயும்
சேர்ந்து தொடர வழிநடந்தார். 15

## இராஜகிருக நகரத்தை அடைதல்

### வேறு

மானேந்தும் ஈசனுளம் நாண, ஆட்டின்
மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்,
வானேந்து மதில்மீது கொடிகள் ஆடும்
மாநகரின் திருவாயில் வந்த போது; 16

## மாலைக் காலம்

### வேறு

செங்கதிர் வெம்மை தணிந்ததடி!—வாசத்
தென்றல் உலாவி எழுந்ததடி!
பொங்கி வருஞ்சோணை மாநதியும்—ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலிந்ததடி! 17

முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி!—ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி!
எல்லை யிலாமலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி? 18

தாயும் இரங்கி வழிகுதடி—கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி!
ஆயும் பொழிலில் பறவையெல்லாம்—அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி! 19

## வீதியில் கண்டவர் வியந்து நிற்றல்

வையகந் தன்னில் உயிர்களின் மீதருள்
மாரி பொழியும் பெரியவனும்
ஐயனைக் கண்டவர் கொண்ட அதிசயம்
ஆராலே கூற இயலுமடி! 20

வாயிலைக் காத்திடும் சேவகரும்—வழி
மாறா விலகி ஒதுங்கிநின்றார்;
தாயினும் மிக்க தயாளன் இவன்—போல்இத்
தாரணி கண்டதும் உண்டோஎன்றார். 21

பாதையிற் சென்றவர் பார்த்துநின்றார்—ஒரு
பக்கமாய் வண்டிகள் ஓட்டிநின்றார்;
மாதவம் ஈதலால் வேறுளதோ!—என
வாயார வாழ்த்திப் புகழ்ந்துநின்றார். 22

சந்தை இரைச்சல் அடங்கியது!—கடைச்
சண்டையும் இல்லா தொடுங்கியது!
வந்தவர் போனவர் கண்களுக்கும்—அந்த
வள்ளல் முகம்விருந் தானதம்மா! 23

கூடம் எடுத்தங்கை தாழ்ந்திடாமல்—ஒரு
கொல்லனும் கண்டு திகைத்துநின்றான்;
ஊடுபா வோட்டிய சாலியனும்—நூலை
ஓட்டி முடியாது விட்டுவந்தான். 24

மண்ணைச் சுமந்து வருங்குயவன்—ஈதோர்
மாமுனி என்று வணங்கிநின்றான்;
எண்ணெய்க் குடமேந்து வாணியனும்—இவர்
யாரோ பெரியர் எனப் பணிந்தான். 25

பள்ளிச் சிறுவரும் சாடிவந்தார்—அவர்
பக்கத் தண்ணாவியும் ஓடிவந்தார்;
கள்ளரும் உள்ளம் மறந்துநின்றார்—வட்டக்
காரரும் காசிப்பை விட்டுவந்தார். 26

---

26. அண்ணாவி — உபாத்தியாயர்; வட்டக்காரர்— சில்லறை கொடுப்போர்.

மாடும் அரிசியைத் தின்றதம்மா!—அதை
மாற்றி யடிப்பாரும் இல்லையம்மா!
வீடும் திறந்து கிடந்ததம்மா!—உலை
வெந்திடு சோறும் குழைந்ததம்மா! 27

பெண்டுகள் வாசலில் கூடிநின்றார்—இந்தப்
பேரரு ளாளனும் யாரோஎன்றார்;
கண்டவர் உள்ளம் கனியுதென்றார்—இவன்
கண்ணின் அழகினைப் பாரும்என்றார் 28

கன்னி ஒருமகள் மையெழுதி—இரு
கண்ணும் எழுதுமுன் ஓடிவந்தாள்;
பின்னும் ஒருமகள் கூந்தலிலே—சூடும்
தச்சி மலர்கையில் சுற்றிவந்தாள். 29

பாலுக் கழுத மதலையுமே—ஐயன்
பக்கம் வரக்களிப் புற்றதென்றால்,
சேலொக்கும் மாதர் விழிகள்—அவன்முகச்
செவ்வியில் ஆழ்வது அதிசயமோ! 30

கண்ணிற் கருணை விளங்குதென்றார்—நடை
கம்பீர மாகவுங் காணுதென்றார்;
எண்ணில் இடையனும் ஆகான் என்றார்—இவன்
இராஜ குலத்தில் பிறந்தோன் என்றார்; 31

யாகப் பசுவை எடுத்துவரும்—இவன்
எண்ணரும் பக்தி யுடையன் என்றார்;
மாகந் தொழுதேவ ராஜன்என்றார் உயர்
மாதவச் செல்வன் இவனேஎன்றார். 32

32. மாகம்—விண்ணுலகம்.

செம்பு நிறைந்துபால் சிந்திடவே—சிலர்
சிந்தை மறந்து கறந்துநின்றார்;
எம்பிரான் செல்லும் வழியின் சிறப்பெலாம்
எங்ஙனம் சொல்லிமுடிப்பேன், அம்மா! 33

வேறு

வையமிசை உயிர்கள்படும் துயரை எண்ணி
மறுகும் உளத்து அயலொன்றும் அறியா னாகி,
ஐயனும்அவ் வீதிவழி நடந்து மன்னன்
அரியமகம் செய்யுமிடம் அணுகி னானே. 34

## யாகசாலை வருணனை

வேறு

தாரணி மன்னவன் பிம்பிசாரன்—யாக
சாலை நடுவினில் வந்துநின்றான்;
ஆரணம் ஓதிய அந்தணரும்—நிரந்து
அங்கிரு பக்கமாய்க் கூடிநின்றார். 35

மந்திரம் ஓதி எரிவளர்த்தார்—புகை
வானை யளாவி எழுந்ததம்மா!
இந்தன மிட்டுப் பெருக்கிநின்றார்—தீயும்
ஏழுநா விட்டுச் சுழன்றதம்மா! 36

பண்டங்கள் வாரி இறைத்தாரம்மா!—சோம
பானங்கள் அள்ளிச் சொரிந்தாரம்மா!
குண்டம் நிறையநெய் விட்டாரம்மா!—எரி
கோபுரம் போல உயர்ந்ததம்மா! 37

34. மகம்—யாகம்; 36. இந்தனம்—விறகு

வேதம் விதித்த விதிமுறையில்—ஒரு
வெள்ளாடு கண்டு பிடித்துவந்து,
பாதக மான பலியிடவே—அங்கு
பாரில் கிடத்தி யிருந்தாரம்மா; 38

ஆடுகள் விட்ட உதிரமெல்லாம்—அங்கோர்
ஆறுக ஓடிப் பரந்ததம்மா!
நாடியவ் வேள்விக் களத்தை விரித்திட
நாவும் நடுங்கி ஒடுங்கு தம்மா! 39

நீட்டிக் கழுத்தை அறுப்பதற்கோ?—அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ?
தீட்டிய கத்தியும், கையுமாக ஒரு
தீக்ஷிதர் முன்வந்து நின்றாரம்மா! 40

## அர்ப்பணம் செய்தல்

### வேறு

யாகத் திறைவரே! எண்ணருந் தேவரே!
அம்புவி யாளும் அரசர் பெருமான்
பிம்பி சாரப் பெருந்தகை, இந்நாள்
மறைகளில் விதிக்கும் வழிவகை யறிந்து
முறையிற் செய்து முடிக்கும்இம் மகத்தில்

பேணி உமக்கிடும் பெரும்பலி இதுவாம்!
உயிரொடு துள்ளி ஒழுகிடும் உதிரம்
கண்களிற் கண்டு களிப்பீ ராகுக!
சீரிய குணத்துஎம் செங்கோல் மன்னன்
பாரில் செய்த பழியும் பாவமும்

தாங்கி இவ்வாடு சாவக் கையினில்
வாங்கும்இவ் வாளால் வதைத்துஅவ் வூனையும்
எரிவாய் இடுவன், யாவும்
பொரியாய்ப் புகையாய்ப் போவது குறித்தே; 41

## புத்தர் தடுத்தல்

### வேறு

*என்று சொல்லியாக தீக்ஷிதரும்—வாளை*
*ஏந்திய கையினை ஓங்கையிலே,*
*போன்றும் உயிரினைக் காக்கவரும்—அந்தப்*
*புண்ணிய மூர்த்தியும் ஓடிவந்து,* 42

*"அண்ணலே இக்கொடும் பாவிஇவ் வேளையில்*
*ஆட்டினைக் கொல்லா தருள்புரிவீர்*
*திண்ணிய ஞான முடையவரும்—இந்தத்*
*தீவினை செய்வரோ" என்றுரைத்தான்.* 43

*காலிலே கட்டிய கட்டவிழ்த்தான்—அதன்*
*கண்டம் இறுக்கிய கட்டவிழத்தான்;*
*வாலிலே கட்டிய கட்டவிழ்த்தான்—அதன்*
*வயிறினிற் கட்டும் அவிழ்த்துவிட்டான்!* 44

## அறிவுரை கூறுதல்

*நின்றவர் கண்டு நடுங்கினரே—ஐயன்*
*நேரிலே நிற்கவும் அஞ்சினரே;*
*துன்று கருணை நிறைந்தவள்ளல்—அங்கு*
*சொன்ன மொழிகளைக் கேளும், ஐயா:* 45

*"வாழும் உயிரினை வாங்கிவிடல்—இந்த*
*மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;*
*வீழும் உடலை எழுப்புதலோ—ஒரு*
*வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!* 46

யாரும் விரும்புவ தின்னுயிராம்—அவர்
என்றுமே காப்பதும் அன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப்—படும்
பாடு முழுதும் அறிந்திலீரோ? 47

நேரிய உள்ளம் இரங்கிடுமேல்—இந்த
நீள்நிலம் முற்றுமே ஆண்டிடலாம்;
பாரினில் மாரி பொழிந்திடவே—வயல்
பக்குவ மாவ தறிந்திலீரோ? 48

காட்டும் கருணை யுடையவரே—என்றும்
கண்ணிய வாழ்வை உடையவராம்;
வாட்டும் உலகில் வருந்திடுவார்—இந்த
மர்மம் அறியாத மூடரையா! 49

ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறைவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா! 50

மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் கண்டு களிப்பதுண்டோ?—இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா! 51

காடு மலையெலாம் மேய்ந்து வந்து—ஆடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவதும் ஒரு
தீய செயலென எண்ணினீரோ? 52

மேடையில் நீங்களும் மூடிப் படுத்திட
மெல்லிய கம்பளி தானளித்து
வாடையி லாடிக் கொடுகுவதும்—அதன்
வஞ்சகச் செய்கையோ, சொல்லும் ஐயா? 53

அம்புவி மீதில்இவ் வாடுகளும்—உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?
நம்பி யிருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்கு வருமோ ஐயா? 54

காட்டுப் புலியுன் கொடுமையஞ்சி—உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ?—அந்த
நான்மறை போற்றிய நீதிஐயா? 55

மண்ணில் வளர்ந்திடும் புல்லையுண்ணும்—வான
மாரி பொழிந்திடும் நீரையுண்ணும்;
எண்ணிநீர் செய்யும் உதவியென்னும்—இதை
ஏனோ உணர்ந்திலீர் மானிடரே! 56

பிள்ளையைக் கொன்று கறி சமைத்தீர்—அதன்
பெற்றோரை உண்ண அழைத்துநின்றீர்;
வள்ளலே உள்ளந் தெளிந்தவரே—இது
வாழ்வை யளிக்கும் செயலாமோ? 57

மன்னுயி ரெல்லாம் உலகில்—ஒருதாயின்
மக்களென் றுண்மை அறிந்திலீரோ?
தன்னுயிர் போற்றிப் பெரும்பழி செய்வது
சண்டாளர் கண்ட நெறியலவோ? 58

---

53. கொடுகுவது-குளிரால் நடுங்குவது.

மாண்ட மனிதனோர் ஆடுமாவான்—உடல்
மாறியோர் ஆடும் மனிதனாகும்;
நீண்ட உலகின் இயற்கைஐயா!—இது
நீதிநூல் கண்டிடும் உண்மைஐயா! 59

பாரில் உதிரம் குளிப்பதனால்—ஒரு
பாவமும் நீங்குவ தில்லைஐயா!
சீரிய தேவரும் இச்செயல்—கண்டுதம்
சிந்தை களித்திட மாட்டாரையா! 60

தாயென நம்பி வரும்உயிரை—யாக
சாலை நடுவில் கிடத்திஒரு
பேயெனக் கீறிப் பிளப்பதனால்—என்ன
பேறும் பெயரையும் பெற்றீரையா? 61

துட்டப் பிசாசைக் குறித்திடினும்—இந்தத்
தூண்டிலில் வந்த தகப்படுமோ?
வெட்டிக் கொலைசெய்ய வேண்டாமையா!—இதை
விட்டொழிதல் மிக்க மேன்மைஐயா! 62

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம்—ஏழை
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை—விட்டுச்
செல்வ தொருநாளு மில்லைஐயா! 63

முன்னைப் பிறப்பினில் செய்தவினை—யாவும்
முற்றி முதிர்ந்து முளைத்தெழுந்து
பின்னைப் பிறப்பில் வளர்ந்திடும் என்பது
பித்தர் உரையென எண்ணினீரோ? 64

நெஞ்சினில் வாயினில் கையினில்—செய்திடும்
நீதி அநீதிகள் யாவையுமே
வஞ்சமி லாது மறுபிறப்பில்—உம்மை
வந்து பொருந்தாமற் போயிடுமோ? 65

கன்று பசுவை மறந்திடினும்—செய்த
கருமங்கள் உம்மை விடுமோஐயா!
கொன்று பழிதேட வேண்டாம்ஐயா;—இனிக்
கொல்லா விரதம்மேற் கொள்ளும்ஐயா! 66

தானியம் பற்பல தாமிலையோ?—சுவை
தாங்கிய காய்கனி தாமிலையோ?
வான மழைதரு நீரிலையோ?—இவை
வாழ்ந்திடப் போதும் உணவலவோ! 67

ஊனுண வின்றி உறவுகொண்டு—நிலத்து
உள்ளதை யாவரும் உண்டிருந்தால்,
மானும் புலியும் ஒருதுறையில்—நீரை
வந்து குடிப்பதும் காணலாமே. 68

ஆதலால், தீவினை செய்யவேண்டாம்—ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டாம்,
பூதலந் தன்னை நரகம் தாக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும், ஐயா!" 69

வேறு

வாய்பேச உயிரெலாம் வாய்பெற்று அங்கு
வாதாடி வழக்கிட்ட வாறீ தென்னத்
தாய்போலுந் தயவுடைய தரும மூர்த்தி
சாற்றியநல் லறவுரைகள் யாவுங் கேட்டு— 70

## கொலை தவிர்த்தல்

### வேறு

தீக்ஷிதரும் வாளை விட்டெறிந்தார்—ஓமத்
தீயெரி குண்டம் அழித்துவிட்டார்;
மோக்ஷம் இவையுந் தருமோ என்றார்
மூர்த்தியின் பாதம் பணிந்து நின்றார் 71

"செய்பிழை யாவும் பொறுத்தருள்வீர்"—எனச்
சேவித்து மன்னனும் தாழ்ந்து நின்றான்;
"ஐயனே நாட்டில் கொலை தவிர்த்து—நாளை
ஆணையும் கட்டுவேன்" என்றுரைத்தான். 72

## அரசன் கொலை தவிர்க்கக் கட்டளையிடல்

### வேறு

"மன்னுயி ரெல்லாம் தன்னுயிர் போல
நிலமுழு தாளும் நெடுமுடி யண்ணல்
பிம்பிசாரப் பெரும்பெயர் வேந்தன்,
மெய்யகங் கண்டுஇவ் வையகம் உய்ந்திடத்
திருவருள் புரிந்த செய்தி இதுவாம்;
பாகசாலையில் பக்குவம் செய்தும்
யாக சாலையில் எரிவாய் ஊட்டியும்
பலவா முயிரின் குலம்வே றறுத்தல்
பழியும் பாவமும் பயக்கும் செயலாம்.
ஆதலின்,
ஊனை உண்பதும் உயிர்க்கொலை புரிவதும்
இந்நாள் முதல்இந் நன்னாட் டெல்லையில்
இல்லா தொழிக; ஈதுஎம் ஆணை!
அருளுடை யோர்க்கே அருளும்
உறுதுணை யாமென்று உளங்கொள் வீரே." 73

### வேறு

மந்திர வோலை எழுதுபவர்—அந்த
மன்னன் ஆணைஇம் மாநிலத்தில்
சந்திர சூரியர் உள்ளளவும்—நிலை
தந்திடச் சாசனம் கண்டாரம்மா! 74

பாறைகள்மீது வரைந்துவைத்தார்—வழிப்
பக்கமும் தூணில் பொறித்துவைத்தார்,
ஆறு குளங்கள் துறைகளிலும்—கல்லில்
ஆணை அழியாது எழுதிவைத்தார். 75

அங்காடி வீதியில் கண்டிடலாம்—சந்தி
அம்பலந் தோறுமே கண்டிடலாம்;
கங்கா நதிக்கரை எங்கும்இவ் வாணையைக்
காணா இடமேதும் இல்லைஐயா. 76

### வேறு

அந்நாள் முதலாம் பின்னா ளெல்லாம்
மாதமும் மாரி வானம் பொழிந்தது;
நாடு செழித்தது; நகரம் சிறந்தது;
உண்மை யறிவும் உதய மாயது;
செம்மை வளர்ந்தது; தீமை தேய்ந்தது;
புத்தன் உரையைப் பொன்னுரையாக
நித்தம் நித்தம் நினைத்த பயனாய்க்
கொல்லா விரதம் குவலயத்து
எல்லா உயிர்க்கும் இன்பளித் ததுவே! 77

# 8. புத்தரும் சுஜாதையும்

## சுஜாதையின் குறை

பார்புகழ் கங்கை பாயும்நன் னாட்டில்
ஆட்டின் மந்தையோடு ஆனிரை பலவும்
ஆளும் அடிமையும் அளவிடற்கு அரிய
நிதியும் பண்ணை நிலங்களு முடையோன்,
பக்தியில் சிறந்தோன் பரம தயாளன்,

தன்னிக ரில்லாத் தலைவன் ஒருவன்
வாழ்ந்து வந்தனன். வாழ்ந்தவன் இறந்த
திருப்பதி யதனைச் 'சேனானி' என்னும்
அவன்குடிப் பெயரால் அழைத்தனர் எவரும்
வள்ளல் இவற்கு வாய்த்த மனைவி—

உண்மையும் அறிவும் உறையும் உளத்தினள்;
எளிமையும் பொறுமையும் இரக்கமும் உடையவள்;
எவர்க்கும் இன்னுரை இயம்பும் இயல்பினள்;
பூத்த தாமரை பொலிவுறு முகத்தினள்;
அங்கயற் கண்ணி, அழகின் செல்வி;

மங்கையர் மாமணி, மாசறு மடந்தை—
சுஜாதை என்னும் சுகுணசுந் தரியாம்.
செப்புதற்கு அரிய செல்வம் படைத்திவர்
இருவரும் இல்லறம் இனிது நடாத்தி
வாழும் நாளில், மைந்தன் இல்லாக்
குறையொன்று அவருளம் குடிகொண் டிருந்தது.

## சுஜாதை நேர்ந்த கடன்

அதனால்,
தேவி சுஜாதை தினந்தினந் தவறாது
அரசு சுற்றினள், ஆலயம் தொழுதனள்.

நோன்புகள் பற்பல நோற்று வந்தனள்.

அன்ன சத்திரம், ஆதுலர் சாலை,
தண்ணீர்ப் பந்தல், சாவடி யாதிய
அறநிலை யங்கள் ஆங்காங்கு அமைத்தனள்;
'உம்பரும் விரும்பி உண்பதற் குரிய
பண்டம் பலவும் பக்குவம் செய்து

பொற்றா லங்கள் பொலிவுற எடுத்து
வனத்தின் தெய்வம் வாழ்மரத் தடியில்
வைத்து நின்று வணங்குவேன்' என்றொரு
நேர்த்திக் கடனும் நேர்ந்தி ருந்தனள்.

## புதல்வனைப் பெறுதல்

அப்பால்,

திருவரு ளாலொரு செல்வக் குமரனைப்
பெண்மணி யவளும் பெற்றனள்; பெற்று
மூன்று மாதம் முற்றிய பின்னர்,
ஒருகை,
மைந்தனை ஏந்தி மார்போடு அணைக்க,

ஒருகை,
தேவினுக் குரிய தீஞ்சுவை யமுது
தாங்கிய கலசத்தைத் தாங்க, ஒருநாள்
அடவியில் அமைந்த ஆலயம் நோக்கி
அன்ன மெனஇவள் அசைந்து சென்றனள்.

## புத்தரைக் கண்டவள் வந்து கூறுதல்

அசைந்து செலவே, அந்நாட் காலையில்
தூர்த்து மெழுகித் துப்புர வாக்கி
மரத்தின் அடியில் மஞ்சள் பூசி

மங்கல நூலை வரிவரி யாக
வரிந்து சுற்றி வைத்திட ஏகிய
செல்வி இராதை, திரும்பி வந்து
காணாக் காட்சி கண்டவ ளாகி,
"அதிசயம், அதிசயம், அம்மா அதிசயம்!
மலர்கள் மலர்ந்து மழையெனப் பொழியும்
மரத்தின் அடியில் மௌன மெய்தி,
சோதி மண்டலம் சூழ்ந்து பொலிய
முழங்கை முடக்கி முட்டில் அமர்த்தி.
வனத்தில் வாழும் மாபெருந் தெய்வம்
அருள்வடி வாகி அமர்வது பாராய்!
சாந்தம் உருவாய்த் தழைப்பது காணாய்!
விரிதா மரையை வென்ற விழிகளில்
தெய்வத் தன்மை திகழ்வது நோக்காய்!
பாக்கியம், பாக்கியம், பாக்கியம் அம்மா!
கண்ணிற் காணா கடவுளை இந்த
மண்ணிற் கண்டு வணங்கப் பெறுதலே!"
என்று பலவும் இயம்பி நின்றனள்.
சுகுண சுந்தரி சுஜாதை கேட்டு,
நெஞ்சில் அன்பு நிறைந்தவ ளாகி,
வனத்தில் வந்து, மலர்மழை பொழியும்
மரத்தின் அடியில் வையகம் வாழ
மாதவம் செய்யும் வள்ளலைக் கண்டனள்.

## சுஜாதை புத்தரை வணங்குதல்

### வேறு

கண்ணெதிர் காட்சி தந்த
    கடவுளே இவரென்று எண்ணி
மண்ணுற வணங்கிச் செந்தா
    மரைமல ரடிகள் போற்றி,

'பண்ணியஞ் சிறிது யானும்
பக்குவம் செய்து வந்தேன்.
அண்ணலே! அருந்தி நீயும்
அருள்செய வேண்டும்' என்றாள். 2

என்றவள் படிகக் கிண்ணம்
ஏந்திய வாச நீரை
அன்றவன் திருக்க ரங்கள்
அலம்பிட அளித்து, அப் பாலோர்
பொன்தரு கலத்தில் பண்டம்
பொலிவுறப் பெய்து நின்றாள்;
ஒன்றிய கருணை மூர்த்தி
உம்பர்நாட் டமுதின் உண்டான். 3

## புத்தர் அமுதுண்டு வினவுதல்

### வேறு

உண்ட அமுதின் உறுகுண மெல்லாம்
ஏழைஎன் நாவால் இயம்புதல் எளிதோ?
இரவும் பகலும் இடைவிடாமல்
ஊணும் உறக்கமும் இன்றி; உரவோன்
தீவிர மாகச் செய்த தவத்தால்

வாடி இளைத்து வருந்திய களைப்பெலாம்
கனவு போலக் கழிந்து போயது.
உயிரும் உணவை உண்டது போல
ஊக்கமும் ஒளியும் ஒருங்கு பெற்றது.
வேனில் வெயிலில் வெந்தெரி வேளையில்

பாலை வனத்தில் பறந்து பறந்து
தளர்ந்த பறவையோர் தடாகங் கண்டு
குளித்துக் குடித்துக் குதுகலிப் பதுபோல்
ஆரமு துண்ட அரும்பய னாக

ஆவியும் பேரா னந்த மடைந்து, அவ்
அண்ணல் முகமும் அழகு பொலிந்தது;
அண்ணல் முகம்பொலி வடைய அடைய
மங்கை சுஜாதை மனங்களிப் புற்றுத்
தொழுது போற்றித் துதித்து நின்றனள்;
'காணற் கரிய கடவுள்நீ தானோ?
படைத்த உணவைப் பருகினை நீயும்
இன்புற் றனையோ?' என்று வினவினள்.
ஐயனும்,
'இன்றுநீ அன்பின் எனக்குப் படைத்தது
எவ்வகை உணவாம்? இயம்புக!' என்றனன்.

## சுஜாதை கூறிய மறுமொழி

'பாலொரு நூறு பசுக்கள் கறந்ததை
ஐம்பது பசுக்கள் அருந்த வைத்தனன்;
ஐம்பது பசுக்கள் அளித்த பாலினை
இருபத் தைந்து பசுக்களுக்கு ஈந்தேன்;
இருபத் தைந்தும் இறக்கிய பாலினைப்
பன்னிரு பசுக்கள் பருகிடச் செய்தேன்;
பன்னிரு பசுக்களின் பாலையும் ஏந்திப்
பண்ணையி லுள்ள பசுக்களில் சிறந்த
ஆறு பசுக்கள் அருந்திடக் கொடுத்தேன்
ஆறு பசுக்களும் அளித்த பாலை
வெண்பொற் கமலம் விளக்கி, அதனில்
புத்தம் புதிய புலங்கண் டுழுது,
முரம்பு தட்டி, முக்கனி யிட்டுத்
தெரிந்த விதையைத் திருந்த விதைத்து
விளைந்த நெல்லை, வீசித் தூற்றிக்
கொழித்து நாவிக் குற்றி எடுத்த
அணிமுத் தனைய அரிசியை யிட்டுப்

பக்குவம் செய்த பாலமுது இதுவாம்.
பிள்ளை பிறந்தால் பெருந்திரு அமுது
வனத்தின் கடவுள் வாழ்மரத் தடியில்

வைத்து நின்று வணங்குவேன் என்றொரு
நேர்த்திக் கடன்முன் நேர்ந்தி ருந்தனன்.
இன்று,
மைந்தனைப் பெற்ற மகிழ்ச்சியால், அந்த
நேர்த்திக் கடனை நிரப்பிட வந்தேன்;
இனியென் வாழ்வெலாம் இனியநல் வாழ்வாம்;
யாதும் ஐயம் இலை' எனக் கூறினள்.

## புத்தர் மகவை வாழ்த்தல்

அப்பால்,
மதலையைப் பொதிந்த மஞ்சள் நிறத்தனை
ஆடையை மெல்ல அகற்றி, நம் அண்ணல்

உவந்திவ் உலகெலாம் உய்ய உழைக்கும்
திருக்கரங் களைஅதன் சிரசின் மீது
வைத்து நின்று, 'மங்கையே, உனக்கு
மனத்தில் இன்பம் வளர்ந்து வருக!
மைந்த னிவனும் மாநிலமீது
வருந்தாது இனிய வாழ்வு வாழ்க!

## தான் யாரென்று கூறல்

காணுதற் கரிய கடவுள் யானலன்;
மண்ணிற் பிறந்தஓர் மனிதனே அம்மா!
ஆதியில் உலகாள் அரசிளங் குமரன்;
இந்நாள்,
வையக மாந்தர் மனஇருள் போக்கும்
உண்மை ஞான ஒளியினைத் தேடி

ஆருண் டாக அல்லும் பகலும்
அலைந்து திரியும் ஆண்டியும் ஆவேன்
உண்மை ஞான ஒளியினை யானும்

அடைவன்; அதற்கோர் ஐய மேயிலை.
பிறப்பும் பற்பல பிறந்து பிறந்து
பாவம் போக்கிப் படிப்படி யாக
மேலாம் பிறப்பை மேவிடும் உயிர்போல்,
உயிர்மே லுயிருக்கு ஊட்டி யூட்டி

வடித்து வடித்து மாசு நீக்கிய
ஒப்பிலாச் சுத்த உணவாம் இதனை
உண்டு தெளிந்த உடலைக் கண்டபின்
உண்மையை அறிவதும் உறுதி யாமெனச்
சிந்தையில் நன்கு தெரிந்து கொண்டனன்.

## அவளைக் கேட்டல்

மாதே! நீவெறும் வாழ்க்கையி னால்இவ்
உலகில் இன்பம் உண்மை யாக
அடைகின் றனையோ? அறியச் சொல்வாய்!
பெற்ற வாழ்க்கையும் பேணிய அன்பும்
புவியில் உனக்குப் போதுமோ அம்மா!"

## சுஜாதை மறுமொழி கூறுதல்

ஏந்திழை அதுகேட்டு,
அகிலம் புகழும் அண்ணலே! தொழுதேன்
சிறிதாம் என்உளம், சின்னஞ் சிறிய
ஆம்பல் இதழினும் அறவே சிறிதாம்;
தரணி மீது தழைத்துஅது வளரச்

சிந்திப் பெய்யும் சிறுமழை போதும்.
கணவன் உள்ளக் கருணையும், என்றன்

மதலையின் முகத்தில் மலர்புன் சிரிப்பும்
உயிரை ஊட்டும் உதய பானுவாய்
உதவிடும், ஐயா! உண்மை இதுவாம்.

காலையி லெழுந்து கடவுளைத் தொழுவேன்;
தானியம் அளந்து தானஞ் செய்வேன்;
வெள்ளாட் டிகட்கு வேலைகள் விதிப்பேன்;
அப்பால்,
நண்பகல் வேளைஎன் நாயகன் அயர்ந்து

மடியில் தலையை வைத்து நித்திரை
செய்ய, யானும் சிந்தை மகிழ்ந்தே
இதமாய் இனிய இசைகள் பாடி
விசிறி எடுத்து வீசி யிருப்பேன்;
அப்பால்,

மலையிற் கதிரோன் மறைந்திடு வேளை,
கணவன் உண்டு களித்திடச் சுவைதரு
பண்டம் பலவும் பரிமாறி நிற்பேன்;
அப்பால்,
விண்மீன் வானில் விளக்கிடு நேரம்

ஆலயம் தொழுவேன், அன்பு நிறைந்த
நண்பர் பலரொடு நல்லுரை யாடுவேன்;
ஈசன் அருளால் இத்தனை பேறும்
பெற்ற எனக்கினிப் பெரும்பேறு ஒன்று
பெறுதற் குளதோ? பிள்ளை இவனால்
தந்தையின் ஆன்மா தனிவிசும் பதனை
அடைவதில் ஏதும் ஐயம் உண்டோ?
வேனில் வெயிலில் வெந்தெரி வேளையில்
நீள்வழிச் செல்வோர் நிழலிற் செல்ல,
சாலை மரங்கள் தழைத்திட வைப்போர்,
ஆறு குளங்கள் ஆங்காங்கு அமைப்போர்,
அன்ன சத்திரம் ஆலயம் எடுப்போர்,
பொன்போல் இனிய புதல்வரைப் பெறுவோர்,

யாவரும், மரணம் எய்திய பின்னர்,
மேவுதற்கரிய மேற்கதி அடைவர்.

எனவே மறைகள் இயம்பிடுகின்றன.
நன்மை தீமை நாடி யுணர்ந்தோர்
உண்மை ஞான முடைய உரவோர்
வேத சாத்திரம் விதிமுறை தெரிந்தோர்
கண்ணுற் கடவுளைக் கண்ட பெரியோர்

முன்னை முனிவர் மொழிந்த மொழியெலாம்
(அவரினும் சிறந்த அறிவிலேன் ஆதலின்)
மெய்ம்மொழி யாக மேற்கொண்டு ஒழுகுவேன்.
எவர்க்கு மெவர்க்கும் இவ்வுலகு இதனில்
என்று மென்றும் எங்கணு மெங்கணும்

நன்மை விதைத்தால் நன்மையே விளையும்;
தீமை விதைத்தால் தீமையே விளையும்;
கரும்பில் வேம்பு காய்ப்பது முண்டோ?
வேம்பில் கரும்பு விளைவது முண்டோ?
வெறுப்பா லாவது வீண்பகை யேயாம்.

அன்பா லனைவரும் நண்பரே யாவர்,
பொறுமையால் இந்தப் புவிமீது என்றும்
அழியா அமைதி அடைவதும் எளிதாம்.
இறந்த பின்னரும் இதுபோல் இன்னொரு
நற்கா லந்தான் நண்ணுதல் அரிதோ?

இதினினும் சிறந்த இனிய காலம்
அணுகும் என்பதில் ஐய மேயிலை.
நிலத்தில் விழுந்த நெல்விதை யொன்று
வாய்த்து வளர்ந்து மணிநெல் ஐம்பது
தாங்கும் கதிரைத் தருவது மில்லையோ?

தேம்பொழி சோலைச் செண்பகத் தருவில்
மலரின் அழகும் மணமும் நிறமும்
முகிழ்க்கும் சிறிய முகையுள் அடங்கி

வசந்தம் வரவெளி வருவது மிலையோ?
ஆயினும்,

தாங்கொணாத் துயரும் தரணி உண்டென
ஐயனே! யானும் அறிவேன் அறிவேன்.
என்கண் காண இச்சிறு மதலை
மடிந்து வீழின் வாழ்வனோ ஐயா?
கணவன் காலம் கழியுமக் கடைநாள்

நித்தம் நித்தம் நிகழ்வது போலென்
மடிமீது அவர்தம் முடியினை ஏந்தி
ஈமக் கட்டையில் யானும் இருப்பேன்,
வானுற ஓங்கி வளருந் தீயில்
மூச்சு முட்ட மூடும் புகையில்

மயக்கம் கொள்ளேன், மகிழ்ச்சி அடைவேன்.
கணவன் உயிர்போங் காலையில் அவனைப்
பற்றித் தொடரும் பத்தினிப் பெண்டிர்
கோதி வளர்த்த கூந்தலின் மயிர்கள்
எத்தனை யுண்டோ அத்தனை கோடி

ஆண்டுகள் அவனும் அழியாச் சொர்க்கம்
வாழ்குவன் என்று மறைகள் கூறிடும்;
ஆதலின், சிறிதும் அஞ்சிடேன் ஐயா!
அஞ்சிடே னாயினும், அருட்பெருங் கடலே!
உன்னை உணவும் உடுக்கத் துணியும்

இல்லையாகி இரந்திடு வோரும்
நோயில் விழுந்து நொந்து நொந்து
பாயில் கிடந்து பரிதவிப் போரும்,
தீய நெறியில் திரிந்து பொல்லாப்
பாதக ராகிப் பழிசெய் வோரும்,

உலகில் உண்டெனும் உண்மை மறவேன்.
என்வாழ்வு என்றும் இனிய வாழ்வாம்.
நன்மையை நிதமும் நாடி நிற்பேன்.

இயன்றதை எண்ணி இனிது முடிப்பேன்.
வேண்டிய யாவும் விதிமுறை செய்வேன்
வரும்விதி வரினும் வருவது முற்றும்
நன்மை வருமென நம்பி வாழ்வேன்.

## புத்தர் அவளை வாழ்த்துதல்

என்று கூறினள், யாவையும் கேட்டபின்
உலகெலாம் புகழும் ஒருதனி முனிவன்,
"அறிவிற் பெரிய ஆசிரி யர்க்கும்
அறிவு புகட்டும்நல் அறிவுடை யவள்நீ!
உண்மை ஞானியும் உணரா உண்மைஉன்
இனிய கதையில் எளிது விளங்கிடும்;
நீதி நெறியும் நினக்குறு கடமையும்
உள்ள வாறுநீ உணர்ந்திருக் கின்றனை!
அம்மா! நீயும் அறிந்த தமையும்
இனிநீ அறிவதற்கு யாது மேயில்லை.
வளர்க, வாச வல்லியே வளர்க!
இனத்துடன் ஓங்கி இனிது வளர்க!
தண்ணிழ லின்கீழ் தழைத்து வளர்க!
உண்மையின் வெங்கதிர் ஒளிஇவ் வுலகில்
இளந்தளிர் வளர்ந்திடற்கு இசைந்த தன்றும்.
இளந்தளிர் என்றும் இளவெயி லதனில்
வாய்த்து வளர்ந்து வானுற ஓங்கிப்
பூத்துக் காய்த்துப் பொலிவுற் றிடுமால்!
என்னை வணங்கிய ஏந்திழாய்! யானும்இங்கு
உன்னை வணங்கி உளங்களிப் புற்றேன்
செல்விஉன் னுள்ளந் தெளிந்த உள்ளமாம்,
அன்பே துணையாய் அடையுங் கூட்டினைச்
சென்று சேரும் சிறுபுறு என்ன
அறியா தனைத்தும் அறிந்து கொண்டனை.
நிலையா வுலகை நிலையென நம்பி

மனித வாழ்வு வாழ்வதன் காரணம்,
அன்னையே நின்னை அறிந்தவர் எவரும்
இன்ன தாமென எளிதின் அறிகுவர்.
இல்லறச் சகடம் இனிது நடாத்தக்
கருவியும் ஈதெனக் கண்டு கொள்வர்.
சந்ததம் நின்னுள்ளம் சாந்தி யடைக!
வாழ்க வாழ்க வளர்ந்துநீ வாழ்க!
வாழ்நா ளெல்லாம் மகிழ்வோடு வாழ்க!
நின்விருப் பெல்லாம் நீபெறு வதுபோல்
என்விருப் பெல்லாம் யானும் பெறுக!
கடவுள் என்றுநீ கருதிய மனிதன்
எளிதின் இதனை எய்திடு மாறு
மாதே! நீயும் வாழ்ந்திடுவாய்'' என
வேண்டி நின்றனன்.

## சுஜாதை அவரை வாழ்த்துதல்

—வேண்டுதல் கேட்டவள்
மதலையின் மீதுகண் வைத்த வண்ணமே,
'சிந்தையில் எண்ணம் சித்தி யாகுக'
என்று வாழ்த்தினள் ஏந்திய மதலை
(அறச்சிறு மதலைகள் அறிஞரும் அறியொணா
அரிய உண்மைகள் அறிந்திடும் என்பர்)
கடவுள் முனிவனைக் கண்டுதன் கரங்களை
நீட்டிய அதிசயம் நினைத்தற்கு அரியதாம்!

## புத்தர் அங்கிருந்து செல்லுதல்

ஐயனும்,
உண்ட உணவால் உடல்வலி வற்றுச்
சிந்தை முற்றும் தெளிந்தவ னாகி,
வாடா மலர்கள் மலர்ந்து சொரியும்
போதி விருட்சம் பொலிபூங் காவினை
நாடிச் சென்றனன் ஞானம் பெறவே.

# 9. புத்தரும் மகனிழந்த தாயும்

[சிறிது காலஞ் செல்ல, சுஜாதையின் மகவு இறந்துவிடுகிறது. அப்போது புத்தர் அவ்வூர் வர, அவள் தன் மகவை உயிர்ப்பிக்குமாறு அவரை வேண்டுகிறாள். அவர் அவளுக்கு அறிவுரை கூறி, 'பிறப்புளதேல் இறப்புமுண்டு' என்பதைப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.]

மண்ணில் வாழ்வுறும் மக்கள் மடிவது
திண்ண மென்றுளந் தேறத் தெளிவுரை
அண்ணல் அன்றோர் அணங்கினுக் கோதிய
புண்ணி யம்பெறு காதை புகலுவாம். 1

வேறு

மூடமான இளமறியை முதுகில் ஏந்தி
மூவுலகும் கருணையினால் வென்ற வீரன்
திடமாகப் பல உயிரும் அளிக்குஞ் சோணைத்
தெய்வநதிக் கரைவந்து சேர்ந்த போது— 2

மகனிழந்த தாய் புத்தரைக் காணுதல்

வேறு

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்;
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வ மெனத்தகும் சீருடையாள். 3

ஆறாகக் கண்ணீர் வடித்துநின்றாள்—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்திநின்றாள்;
தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றி நின்றாள். 4

### வேறு

சந்திர மதிபோல் நின்ற தையலை நோக்கி ஐயன்
வெந்துயர் விளைந்த தென்னை விளம்புக எனலும் அன்னாள்
நைந்துநொந் துருகி யுள்ளம் நயனத்தின் வழியா யோட
மைந்தனைக் காட்டிஇந்த மறுமொழி கூற லுற்றாள்; 5

## அவள் கூறுதல்

### வேறு

அத்திமரம் ஓங்கியெழும் அருஞ்சோலை யதனில்
அயலொருவர் துணையின்றி அடியாளும் அன்பாய்ப்
புத்திரனைப் போற்றிவரும் பொறுமையினைக் கண்டு
புண்ணியநீ கொண்டபரிவு அளவுண்டோ ஐயா? 6

தலைநாளில் நீகண்ட சிறுமகனும் இன்று
தள்ளாடும் உயிரோடு கிடக்கின்றான் ஐயா!
தொலையாத கொடும்பாவி யானும்இனி இந்தத்
தொல்லுலகில் வாழ்வதிலோர் பயனுண்டோ ஐயா? 7

## மகனை அரவு தீண்டல்

சிரித்தமுகம் எனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடும்அவ் வேளை
விரித்தபட மெடுத்தரவொன்று அடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென விளைந்து கிடந்ததுவே. 8

பாலமணம் மாருதசிறு பாலகனும் அறியான்,
படஅரவை விளையாட்டுப் பண்டமெனக்
கொண்டான்;
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டான், ஐயோ! 9

சிறுபொழுது சென்றிடஎன் செல்வமகன் உடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா!
திறந்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா!
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட தையா! 10

## கண்டோர் கூறுதல்

விடமேறி மடிந்ததென விளம்புகின்றார் சிலரே,
விதியாலே விளைந்ததென விரிக்கின்றார் சிலரே,
தடையில்லை இதுமூடு சன்னியென்றார் சிலரே,
சஞ்சீவி அளித்தாலும் சாமென்றார் சிலரே. 11

வயித்தியரைக் கண்டிந்த வரலாறு சொல்லி,
'மயக்கமிது நீங்கவொரு மருந்திலையோ?' என்றேன்;
'வயித்தியமோ இனியேதும் பயனில்லை' என்றார்.
'பட்டமரம் தளிர்த்திடுமோ பாரிடத்தில்" என்றார். 12

அன்பாக அரவிட்ட சிறுமுத்தம் அதனால்
ஆவிக்கும் இடையூறுண் டாமோஎன் ஐயா!
அன்பாரில் மகவிழந்து வாழ்வேனோ ஐயா!
மலையேறிக் குதித்துயிரை மாய்ப்பேனே ஐயா! 13

கண்டாரில் மிக்கஉளக் கனிவுடையர் ஒருவர்,
'காரிகையே! மலைமீது காவியுடை அணிந்து
பண்டிதமாய் அலையுமொரு முனிவர் அடிபணிந்தால்
முடியாத காரியமும் முடியும்' என உரைத்தார். 14

## தாயின் துயரம்

### வேறு

"காடும் மலையுங் கடந்துவந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்கவந்தேன்;
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்தன் உயிரெழச் செய்யுமையா! 15

நெஞ்சிற் கிடத்தி வளர்த்தபிள்ளை—கண்ணில்
நித்திரை நீக்கியான் காத்தபிள்ளை—
விஞ்சு தவத்தினில் பெற்றபிள்ளை—என்னை
விட்டுப் பிரிந்தறி யாதபிள்ளை. 16

பெற்ற வயிறு துடிக்குதையா!—ஒரு
பிள்ளையும் வேறெனக் இல்லை—ஐயா!
உற்ற உறவினர் இல்லை ஐயா!—என்மீது
உள்ளம் இரங்கிட வேணுமையா! 17

### வேறு

வாய்முத்தம் தராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா! 18

முகம்பார்த்துப் பேசாமல்
முலைப்பாலும் உண்ணாமல்
மகன்கிடக்கும் கிடைகண்டு
மனம்பொறுக்கு தில்லையா! 19

நீடும் மதியினைப்போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடி நிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா! 20

'பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூச் சூட்டிடம்மா'
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா? 21

நெஞ்சிற் கவலையெல்லாம்
நிற்காமல் ஓட்டும்அந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது
புத்திதடு மாறுதையா! 22

இட்டளைந்து கூழைஎனக்கு
இன்னமுதம் ஆக்கியகை
கட்டழிதல் கண்டுமனம்
கறங்காய்ச் சுழலுதையா! 23

சோலைப் பசுங்கிளிகள்
தோழனையும் காணாமல்
நாலு திசைகளிலும்
நாடித் திரியாவோ? 24

அன்னப் பறவைகளென்
    அழகனைப் பார்க்கவந்தால்
என்னமொழி கூறஇனி
    என்நா எழுமையா? 25

துள்ளிவிளை யாடஎன்றன்
    சுந்தரனைத் தேடிவரும்
புள்ளிமான் கன்றினுக்குளப்
    பொய்சொல்லி நிற்பனையா? 26

சித்திரத் தேரும்
    சிறுபறையும் கூடிஎனைப்
பித்திலும் பித்தி
    பெரும்பித்தி ஆக்குதையா! 27

குஞ்சை யிழந்தகுயில்
    கூவியழக் கண்டகளு
நெஞ்சை யறுக்குதையா
    நினைப்பொழிய மாட்டாதையா! 28

கொம்படர்ந்த மாவின்
    குலையடர்ந்த பூம்பிஞ்சு
வெம்பிவிழக் கண்டகளு
    மெய்யாய் விடுமோஐயா? 29

கழுத்திற் கயிறிறுக்கிக்
    கன்றுவிழக் கண்டகளு,
பழுத்துப் பலித்திடுமோ?
    பலன்மாறி நின்றிடுமோ? 30

தாயாகி உள்ளம்
    தருக்கி யிருந்ததுபோய்ப்
பேயாக இன்று
    பிணந்தூக்கி நிற்பேனே? 31

"இந்தப் பிறவியில்யான்
    எப்பிழையும் செய்தறியேன்;
எவ்விதம் என்வயிற்றில்
    இவ்விடியும் வீழ்ந்ததையா?" 32

வேறு

கன்றொ ழிந்தகா ராவின் கலக்கமொத்து
அன்று அரற்றி அழுத அரிவையை
என்றும் எங்ஙனும் எவ்வுயி ரும்தொழ
நன்றுகண்ட மெய்ஞ் ஞானியும் நோக்கியே, 33

## புத்தர் கூறுதல்

வேறு

"தாயேநின் மனக்கவலை—ஒழிந்திடத்
    தக்கநல் மருந்தளிப்பேன்;
சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
    திரியவும் செய்திடுவேன். 34

நாவிய கடுகுவேண்டும்—அதுவுமோர்
    நாவுரி தானும் வேண்டும்,
சாவினை அறியாத—வீட்டினில்
    தந்ததா யிருக்கவேண்டும்! 35

---

35. நாவுரி—நாழியும் உரியும்; அதாவது ஒன்றரை நாழி. நாடுரி என்பது பழைய வழக்கு!

பக்கமாம் பதிகளிலே—சென்றுநீ
பார்த்திது வாங்கிவந்தால்;
துக்கமும் அகலுமம்மா!—குழந்தையும்
சுகமாக வாழுமம்மா!" 36

## அவள் கடுகு தேடிச் சென்று வந்து கூறுதல்

### வேறு

என்றுரைத்த மொழிகேட்டு, அவ்வேழை மார்பில்
ஏந்தியணைத் திடுமகனோடு ஊரில் எங்கும்
சென்றுகடு கிரந்துவெறுங் கையளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற்கொண்டு. 37

### வேறு

"புவியெலாம் நிறைந்த புகழோய் புலவர்
கவியெலாம் நிறைந்த கருணையங் கடலே,
ஊரெலாம் அலைந்தேன், ஒவ்வொரு மனையும்
ஏறி யிறங்கினேன், என்குறை உரைத்தேன்.
ஏழை ஒருமகள்—ஏழை யலாதுளவர்

ஏழைக் கிரங்குவர்—என்கதை கேட்டு
மார்போ டணைத்த மதலையைக் கண்டு,
மாறாக் கண்ணீர் வடிவதை நோக்கி,
ஆறாத் துயரம் அடைந்தனள் இவளெனப்
பரிவு கொண்டு என்பக்கம் நின்று

நாவிக் கொழித்த நாவுரிக் கடுகையும்
அளந்துஎன் மடியில் அளித்திட வந்தனள்
பிள்ளை யென்றிடில் பேயும் இரங்குமே!

பெண்டிர் இரங்குதல் பேசவும் வேண்டுமோ?
யானும்,

இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்,
'தாயரே, நீவிர் தங்கும் மனையிது
சாவறி யாத தனிமனை தானா?
தந்தை தாயர் தமக்கை தங்கை
மைந்தர் எவரும் மரித்ததும் உண்டோ?

உரைத்திடும்' என்றேன், உரைகேட்டு அவளும்,
'வினவியது என்னை? விரிநீர் உலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா!
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன்

மாலையில் தளர்ந்து மறைவது மிலையோ?
இம்மா நிலத்தில் இயற்கையின் குறிப்பெலாம்
அம்மா நீயும் ஆய்ந்திலை போலும்!
இவள், கணவனை இழந்த கைம்பெண் அம்மா!
இவள், தந்தையை இழந்த தமியள் அம்மா!

இவள், மைந்தனை இழந்த வறியவள் அம்மா!
இவள், தமையனை இழந்த தங்கை அம்மா!
இவள், மாமனை இழந்த மருகி அம்மா!
இவள் அன்னையை இழந்த அகதி அம்மா!
இறந்தவர் எண்ணிலர்; இருப்பவர் சிலரே.

பிறந்தவர் இறப்பதும் இறப்பவர் பிறப்பதும்
உலகின் இயற்கை; ஒழித்தலும் எளிதோ?
எனவாங்கு,
தேறுதல் மொழிகள் தெரிந்தவை கூறிக்
கண்முன் சான்றுகள் காட்டி நின்றனர்.

யானும், உன்

கட்டளை யுணர்ந்து கவலை கைம்மிக
மற்றொரு வீட்டின் வாயிலிற் சென்றேன்,
அங்குளார்,
கடுகினை யளந்து கட்டிவைத்து, 'அம்மா!

உழுதவர் இந்நாள் உலகி லில்லை;
விதைத்தவர் அன்றோ விண்ணுல கெய்தினர்;
காத்தவர் காலமும் கழிந்து விட்டது;
அடிமையும் இறந்துநாள் ஐந்தா றாகுது;
காலனை எவரே கடக்க வல்லவர்?'

என்று கூறினர். என்செய ஐயா! 38

## வேறு

''ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்
அறியாத மனையேதும் இல்லை யில்லை;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு;
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்
கையமர்ந்த மகவினையும் காணி விட்டேன்;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்'' என்றாள். 39

## புத்தர் தேற்றுதல்

மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினால் அறிந்தவளை நோக்கி, ''அம்மா
எங்குமிலாப் பொருள்தேடச் சென்று நீயும்
யான்நினைத்த பொருளதனைப் பெற்று வந்தாய்;

தங்குமிந்த உலகியற்கை மாறு தம்மா!
தனயனை நீ எண்ணிமனம் தளர வேண்டாம்;
அங்கமெலாம் வாயாக அழுதிட்டாலும்
அவனெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ? 40

வேறு

"பசும்புல் லடர்ந்து பன்மலர் விரிந்து
விசும்பு மண்ணில் விழுந்த தோவெனக்
கண்டவர் ஐயுறுகாட்சிய தாகி
மண்டல வளமெலாம் மலிந்து தங்குமிப்
புலத்தின் வழிமன் புரமது சென்று

கொலைக்கள வேண்டிக் குண்டினுக் கிரையாய்
ஆவதை அறியும் அறிவிலா ஆட்டினைப்
பாவிக ளோட்டும் இப்பரிசு போல,
ஆசையும்,

இன்ப வழியில் இதமா யிழுத்துத்
துன்ப மென்னும் தொடக்கில்
மன்பதை யுலகை மாட்டி விடுமே. 41

வேறு

"இம்மா நிலத்தில் வுண்மையெலாம்
யானும் அறியச் செல்கின்றேன்;
அம்மா நீயும் உன்மகனை
அடக்கம் செய்போ" என்றுரைத்தான்—

வெம்மா வினையின் வேர றுத்து
விளங்கும் ஞான ஒளிகண் டிங்கு
எம்மா தவருந் தொழுதேத்த
எழிலார் கமலத்து எழுந்தோனே. 42

## கவிமணியின் நூல்கள்

மலரும் மாலையும்

மருமக்கள் வழி மான்மியம்

ஆசிய ஜோதி

உமர்கய்யாம் பாடல்கள்

தேவியின் கீர்த்தனங்கள்

குழந்தைச் செல்வம்

கவிமணியின் உரைமணிகள்


**பாரி நிலையம்**

184, பிராட்வே, சென்னை - 108

Wrapper Printed at Eskay Art Printers, Madras-600005.